# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 188 குரோதி வருடம், மாசி மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை (12.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 11, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12


## கமெண்ட் கந்தர்...




## தேசபந்துக்கு பகிரங்க பிடியாணை



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக் கமைய, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று (11) பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.


» 02 பக்கம்

## மைத்ரிக்கு அழைப்பாணை

ரோயல் பாக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கின் பிரதிவாதிக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட பொது மன்னிப்பு நீக்கப்பட்டதன் பின்னர் செலுத்தவேண்டியிருந்த ஒரு மில்லியன் ரூபா நட்டஈட்டுத் தொகை முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் செலுத்தப்பட்டுள்ளதாக அவரின் சட்டத்தரணி நேற்று (11) உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். குறித்த நட்டஈடு செலுத்தப்படவில்லை என்று முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அது தொடர்பில்...




» 02 பக்கம்



## வீட்டில் சமைத்த உணவா... பீட்சாவும் பேர்கருமா... சிறந்தது எது...?

பக்கம் 04



## பிரித்தானிய கடற்பகுதியில் தீப்பிடித்தெரிந்த கப்பல்கள்

பக்கம் 12



## இந்தியாவை பின்தள்ளி முதலிடம் பிடித்த இலங்கை

பக்கம் 12



### மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பஞ்சரத பவனி இன்று...






## மக்களை மறந்து ஐ.எம்.எப். பின்னால் ஓடாதீர்!



### தே.ம.சவை கண்டிக்கிறார் திலித் எம்.பி.

''ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்காக முன்னிருந்து செயற்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை...

» 02 பக்கம்

# பெண் வைத்தியர் துஷ்பிரயோகம்

## அநுராதபுரத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

## படைச்சிப்பாயை தேடுகிறது பொலிஸ்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் கண்டனம்

### தீவிர விசாரணைக்கு அமைச்சர் ஆனந்த உறுதி

» 02பக்கம்

## அதானி விடயத்தில் மாற்றமில்லை!

### பேச்சுவார்த்தைக்கும் தயார்

''அதானி நிறுவனம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. மின் கட்டணத் திருத்தத்துடன் வருவார்களாக இருந்தால் காற்றாலை வேலைத்திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறோம். கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள அவர்கள் தயாராக இல்லையென்றால், இந்த வேலைத்திட்டத்திலிருந்து முழுமையாக...

» 02 பக்கம்



## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிப்பு

### கம்பனிகளுடன் தொடர் பேச்சுவார்த்தை இடம்பெறுவதாக அரசாங்கம் அறிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் தொடர் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாகவும் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

» 02 பக்கம்

## பட்டலந்த அறிக்கை இந்த வாரம் சபைக்கு


### அமைச்சரவையில் விசேட அனுமதி

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை இந்த வாரத்துக்குள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க, நேற்று முன்தினம் (10) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீண்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதுடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் பட்டலந்த அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

» 02 பக்கம்

## உஷ்



ஊடகங்களின் பிரதானிகளை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்தாராம் ஜனாதிபதி அநுர.

சில ஊடகங்கள் வேண்டுமென்று அரசாங்கம் மீது அபாண்டமான செய்திகளை வெளியிடுவதாக இங்கு கவலைப்பட்டாராம் ஜனாதிபதி.

எப்படியோ ஊடகங்கள் மீது அரசாங்கம் கட்டுப்பாட்டை விதிக்காது என்றாலும் அந்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டாராம் அநுர.

## மருந்துகளுக்கு விலைச் சூத்திரம் விரைவில் அமுல்படுத்தத் திட்டம்



பயன்பாட்டிலுள்ள 862 வரையான மருந்துகளுக்கு முறையான விலைச் சூத்திரத்தை விரைவில் அறிமுகப்படுத்த எதிர் பார்த்துள்ளதாகவும் இந்த விலைச் சூத்திரம் மிக விரைவில் நடைமுறைக்கு வருமென்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். மருந்து விலையை தீர்மானிப்பது தொடர்பில் புதிய முறையொன்றை தயாரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர்...

» 02 பக்கம்




## மருந்துகளுக்கு விலை...

சந்திப்பின்போது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

''ஒருசில மருந்துகளுக்கு தனி விநியோகஸ்தர்களே இருக்கிறார்கள். அந்த காலப்பகுதியில் அவர்கள் விரும்பிய விலையில் மருந்துகளை விநியோகிக்க கூடியதாக இருந்தது. அதற்கு சட்டத்தில் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை. அதில் அரசியல் அபிலாஷை தொடர்பான பிரச்சினை இருந்தது. எனவே, மருந்து விநியோகஸ்தர் கூறும் விலைக்கு மாறாக தற்போது எமது வலய நாடுகள் சாதாரண சந்தைகளில் மருந்துகளின் விலை எவ்வாறு இருக்கிறது, அந்த மருந்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான சாதாரண செலவு எவ்வளவு, சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு எவ்வளவு இலாபம் கிடைக்க வேண்டும்? போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி மருந்துக்கான அண்ணளவு விலை தொடர்பில் தீர்மானம் எடுத்தே கொள்வனவு செய்ய புதிய முறையை தயாரித்துள்ளோம்.

அதேபோன்று, விநியோகஸ்தர்களின் அனுமதி தொடர்பிலும் சிக்கல் இருந்தது. ஒருசில விநியோகஸ்தர்கள் பதிவை வேகப்படுத்தியது போன்றே ஒருசில விநியோகஸ்தர்களை பதிவு செய்ய முடியாத வகையிலான முறைகளும் நடைமுறையில் இருந்துள்ளது. அதுதொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். நிறுவன பதிவு செயற்பாடுகளில் 450 கோப்புகள் மாத்திரமே மீதமுள்ளன. மேலும் விநியோகஸ்தர்களுக்கு பதிவு வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். மருந்து இறக்குமதியாளர்கள், தேசிய உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட சகலருடனும் கலந்துரையாடி வருகிறோம். இந்தக் கலந்துரையாடல்களுக்கமைய 862 வரையான மருந்துகளுக்கு முறையான விலை சூத்திரத்தை விரைவில் அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இந்த விலை சூத்திரம் மிக விரைவில் நடைமுறைக்கு வரும்'' என்றார்.

## பட்டலந்த அறிக்கை...

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

பல தசாப்தங்களுக்கு முன்பிருந்து வடக்கு, தெற்கு, மத்திய மலை நாடு உள்ளிட்ட சகல பகுதிகளிலும் ஜனநாயகத்துக்கு முரணான மனித உரிமைகளை மீறும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. அதனை சகலரும் அறிவார்கள். மக்களின் ஜனநாயகத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சுதந்திரமாக வாழக்கூடிய மக்களுக்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, நாங்கள் அதுதொடர்பில் வாக்குறுதிகளை வழங்கி மக்களின் நம்பிக்கையை வென்று ஆட்சிக்கு வந்துள்ளோம். அதனால் நிச்சயமாக குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

பல்வேறு சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றுள்ள நிலையில், தற்போது குறிப்பாக பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் சமூகத்தில் பேசப்படுகிறது. பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி நேற்று முன்தினம் விசேட கவனம் செலுத்தியிருந்தார். இதுதொடர்பில் அமைச்சரவையில் குறிப்பிட்டளவு நேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம்.

அதற்கமைய, இந்த வாரத்துக்குள் பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க அமைச்சரவை தீர்மானம் எடுத்தது. பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்ததன் பின்னர் அதற்கு அப்பாலான நடவடிக்கைகள் குறித்து அறிவிக்க தீர்மானித்துள்ளோம். ஆணைக்குழுவொன்றினால் பரிந்துரை முன்வைக்கப்பட்டவுடன், அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக சம்பந்தப்பட்ட நிறுவனத்தினூடாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே, இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக எவ்வாறான நடவடிக்கை எடுக்கலாம் என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். தேர்தலை இலக்கு வைத்து இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்ததன் பின்னர், பட்டலந்த அறிக்கை தொடர்பான நிலைப்பாட்டை வெளியிடவும் எதிர்பார்த்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

## பெருந்தோட்டத்...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''தேயிலைச் சட்டத்தை திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதி கோரப்பட்டிருந்தது. அதற்கு அனுமதியை பெற்றுக்கொடுத்துள்ளோம். பெருந்தோட்டத் தொழிற்றுறையில் இருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்து கவனம் செலுத்திவருகிறோம். அதன் காரணமாகவே இம்முறை வரவு - செலவுத் திட்டத்திலும் அந்த மக்கள் கோரும் அடிப்படைச் சம்பள அதிகரிப்புக்கான யோசனையும் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், இதற்கு அப்பால் செல்ல வேண்டுமெனில் பெருந்தோட்டக் கம்பனி உரிமையாளர்களுடனும் முகாமைத்துவத்துடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதற்கமைய பெருந்தோட்டக் கம்பனிகளுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதியினால் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அந்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சம்பள அதிகரிப்பு மாத்திரமல்லாமல் நிறுவனங்களின் கீழுள்ள பெருந்தோட்டங்களிலுள்ள சுகாதார வசதி, குழந்தைகளின் கல்வி, தொழில் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகின்றோம். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஒவ்வொரு நிறுவனங்களும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. உதாரணமாக, பெருந்தோட்ட வைத்தியசாலைகளுக்கான வசதிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் சுகாதாரப் பணியாளர்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு தனிப்பட்ட வகையில் செயற்பட்டு வருகின்றது. 1998ஆம் ஆண்டிலிருந்து பெருந்தோட்ட வைத்தியசா லைகளில் தொடர்ந்து இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது.

அதேபோன்று, எப்போதும் நெருக்கடிக்குள்ளாகும் மக்களின் பிரச்சினையாக இருப்பதால் பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். பல்வேறு விதமாக இதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்'' என்றார்.

## அதானி விடயத்தில்...

விடுபடுவது தொடர்பில் அதானி நிறுவனத்தால் இறுதித் தீர்மானம் எடுக்க முடியும்'' என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று (11) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''அதானி நிறுவனம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜனாதிபதி இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னர் ஒரு நிலைப்பாடு, சென்று வந்ததன் பின்னர் இன்னுமொரு நிலைப்பாட்டில் அரசாங்கம் இல்லை. முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். அதானி நிறுவனமும் எமக்கு பொருத்தமான முதலீடுகளை கொண்டுவருமாக இருந்தால் அதுதொடர்பில் பரந்துபட்டளவில் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆனால், காற்றாலை மின்னுற்பத்தி வேலைத்திட்டத்தில் அறவிடப்படும் கட்டணம் தொடர்பில் அரசாங்கத்துக்கு தனிப்பட்ட நிலைப்பாடு இருக்கிறது. அதானி நிறுவனத்தால் அறவிடப்படும் இந்தக் கட்டணம் அதிகமாகும். மின் கொள்வனவுக்காக அதானி நிறுவனம் கட்டணத்தை திருத்த வேண்டுமென்றே நாங்கள் கோருகிறோம். எனவே, அந்தக் கட்டணத்திருத்தத்துடன் வருவார்களாக இருந்தால் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

அதேபோன்று, கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள அவர்கள் தயாராக இல்லையென்றால், இந்த வேலைத்திட்டத்திலிருந்து முழுமையாக விடுபடுவது தொடர்பில் அதானி நிறுவனத்தால் தீர்மானம் எடுக்க முடியும். அதற்காக இலங்கைக்கு இனி எந்த முதலீடுகளும் கிடைக்காது என்பது பொருளல்ல. எந்த முதலீட்டாளராக இருந்தாலும் அவர்களின் முதலீடுகளால் ஏற்படும் சுமையை எம்மால் ஏற்க முடியவில்லை என்றாலோ அல்லது இறுதிக் கட்டமாக அந்த சுமையை மக்கள் மீது சுமத்தும் நிலை வந்தாலோ அதுதொடர்பில் அரசாங்கம் இறுதித் தீர்மானம் எடுக்க நேரிடும். ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோதும், இந்த வேலைத்திட்டம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்திருந்தார். அதன் பிரகாரமே செயற்பட்டோம். அதன் அடிப்படையிலேயே அதானி நிறுவனமும் அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்தது. கட்டண திருத்தத்தை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணம் கட்டணத்தின் அடிப்படையிலும் இந்தியாவினால் முன்னெடுக்கப்படும் முதலீடுகளுக்கு சமமான சாதாரண முதலீடுகளை இலங்கைக்கு எடுத்துவந்தால் அதுதொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம். அவ்வாறு இல்லாமல் ஒரு நிறுவனத்தையும், ஒரு நாட்டையும் மாத்திரம் சார்ந்திருப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கும் இலாபத்தின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்துவோம். அதற்க அப்பால் எங்களுக்கு வேறு எந்த அபிலாஷையும் இல்லை என்றார்.

# பாகிஸ்தானில் பயங்கரம்

# 120 பயணிகளுடன் எக்ஸ்பிரஸ் ரயிலை கடத்திய பயங்கரவாதிகள்

## இராணுவ வீரர்கள் அறுவர் கொலை

பாகிஸ்தானில் 120 பயணிகளுடன் சென்ற எக்ஸ்பிரஸ் ரயிலை கடத்திய பயங்கரவாதிகள், அந்நாட்டு இராணுவ சிப்பாய்கள் அறுவரை கொலை செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பலுசிஸ்தானிலுள்ள போலான் எனும் பகுதியில், பயணிகள் 400 பேருடன் சென்று கொண்டிருந்த ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை நேற்று (11) பலூச் விடுதலை இராணுவம் என்ற பயங்கரவாத அமைப்பினர் தாக்கினர்.

தண்டவாளங்களை வெடிகுண்டுகள் வைத்து தகர்த்து, நாசவேலைகள் செய்து தடுத்து நிறுத்திய பயங்கரவாதிகள், தடுக்க வந்த 6 இராணுவச் சிப்பாய்களையும் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தின் போது பயணிகளில் பலர் தப்பியோடியுள்ளனர். எனினும், ரயிலிலிருந்த பலர் பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்துக்கு தனி பலுசிஸ்தான் நாடு கோரி பயங்கரவாத செயல்களை செய்து வரும் பலூச் விடுதலை இராணுவம் பொறுப்பேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசால் பயங்கரவாத அமைப்பு என்று வகைப்படுத்தப்பட்ட இந்த பலூச் விடுதலை இராணுவம், தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடத்தல் சம்பவத்துக்கு பொறுப்பேற்று பலூச் விடுதலை இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பலுசிஸ்தான் மாகாணத்தில் போலன் மாவட்டத்தின் மஷ்காப், தாதர் பகுதிகளுக்கு இடையே நடத்தப்பட்ட இச்சம்பவம் துல்லியமாக திட்டமிடப்பட்ட செயல். எங்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள், ரயில் பாதையை வெடி வைத்து தகர்த்து, ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்தச் செய்தனர். போராளிகள் விரைவாக ரயிலைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, அனைத்து பயணிகளையும் பணயக் கைதிகளாகப் பிடித்தனர். பாகிஸ்தான் இராணுவம் அதிரடியில் ஈடுபட்டால், அதற்கு தக்க முறையில் பதிலடி தருவோம். - தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் பிடியில் நூற்றுக்கும் மேற்பட்ட ரயில் பயணிகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மைத்ரிக்கு அழைப்பாணை...

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி தண்டனை வழங்காமைக்கான காரணத்தை தெளிவுபடுத்துமாறு அறிவித்து முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு அழைப்பாணை விடுக்குமாறு நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அழைப்பாணை விடுத்து சிறிது நேரத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையான மைத்ரிபால சிறிசேன சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, தனது கட்சிக்காரரினால் குறித்த நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன்போது, இந்த விடயத்தை மனுவொன்றினூடாக நீதிமன்றத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணிக்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

## தேசபந்துக்கு...

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட அதிகாரிகள் 08 பேரை கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி, கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீண்டும் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை வெலிகம, பெலேன பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் ஹரக் கட்டாவுடன் தொடர்புடைய சிலரை கைதுசெய்வதற்காக மாத்தறை, வெலிகம பிரதேசத்துக்குச் சென்றுள்ளனர். அதன்போது வெலிகம பிரதேசத்தில் அமைந்துள்ள W -15 ஹோட்டலிலிருந்து சிவில் உடையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் மேற்கொண்டமையின் காரணமாக அதே திசையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போது குற்றத்தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய உபுல் சமிந்த குமார என்ற பொலிஸ் அதிகாரி உயிரிழந்திருந்தார். இதனுடன் தொடர்புடைய மரண விசாரணைகள் மாத்தறை பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் அதுதொடர்பான தீர்ப்பு கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதற்கமைய, தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 08 பேரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் தற்போது வரையில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸாரால் கைதுசெய்ய முடியாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்களை மறந்து...

நிறைவேற்றுவதற்காக செயற்படக் கூடாது'' – என சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு என்பவற்றுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து நேற்று (11) சபையில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஜனாதிபதி கூறுவது போன்று நாட்டில் 68 – 70 சதவீதம் வரையான மக்கள் வறுமையில் இருக்கிறார்கள். எமது வளங்களை பல்தேசிய நிறுவனங்கள் எடுத்துச் செல்கின்றனவென்றால் எமது மக்களை வாழ வைப்பதற்கு மீதமிருப்பது என்ன, இதனால் எமது மக்கள் வறுமையாகவில்லையா? இவ்வாறான சிக்கல்களின் மத்தியிலேயே மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. மக்களை வறுமையிலிருந்து மீட்டு மகிழ்ச்சியான வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காகவே ஆட்சிக்கு வந்தது.

எனவே, வறுமையை போக்குவதற்காக இந்த வரவு - செலவுத் திட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தில் வள உற்பத்தி தொடர்பில் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, வள உற்பத்தி இடம்பெறும் விதம் தொடர்பில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது, அறிவியல், தொழில்நுட்ப அமைச்சுக்குள் எவ்வாறு புதிய ஆய்வுகளை மேற்கொண்டு அந்த ஆய்வுகளினூடாக எவ்வாறு எமது விவசாய வினைத்திறனை மேம்படுத்தும் புதிய விதை வகைகள், தானியங்களை எவ்வாறு கண்டுபிடிப்பது? இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வரவு - செலவுத் திட்டத்தை கூர்ந்து அவதானித்தால் புத்தாக்க கொள்கை இல்லாமல் சர்வதேச நாணய நிதியத்தின் அவசியத்துக்காக செயற்படுகிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது.

கிறிஸ்டலினா ஜோர்ஜீவா அண்மையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு நல்வாழ்த்துகளை தெரிவித்து பிரார்த்தனையும் செய்திருக்கிறார். எமது ஜனாதிபதி சிறந்தவர் என்றும் நாணய நிதியத்தின் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதாகவும் அவரிடமே கிறிஸ்டலினா பாராட்டியுள்ளார். நாணய நிதியத்தின் செயற்பாடுகள் என்ன? எமது நாட்டு வருமானத்தின் அடிப்படையில் வரி விதித்து நாட்டு மக்களை பெரும் நெருக்கடிக்குள்ளாக்கி அவர்களின் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதே சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமாகும். அவர்களின் தரப்பில் அது சாதாரண விடயமாகும். அவர்களின் திட்டங்களை நிறைவேற்றியதற்காக எமது ஜனாதிபதிக்கு அவர்கள் நன்றி தெரிவிக்கிறார்கள். இதில் சிக்கல் இருக்கிறது.

இந்த சபையில், பிரதமரை தவிர ஏனைய சகலரும் சுதந்திரக் கல்வியில் உருவான இலங்கைப் பிரஜைகள். எமது அனுபவத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்புவது என்பதே எமக்கு இருக்கும் பெரும் பொறுப்பாகும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினர் பிரபுக்கள் ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். எதற்காக அவ்வாறு கூறுகிறார்கள் என்பது புரியவில்லை. ஆனால், இந்த சபையில் இருக்கும் நாம் சகலரும் எந்தவொரு வளமும் இல்லாத குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர்கள். எனவே, நாம் வந்த பின்னணியில் இருக்கும் 70 சதவீதமான மக்களுக்காக செயலாற்றுவதற்கான பொறுப்பு எமக்கு இருக்கிறது. மாறாக சர்வதேச நாணய நிதியத்துக்காக செயற்படுவதற்காகவல்ல.

கிறிஸ்டலினா எமது பிரதமரும் இல்லை. அதற்கான எதிர்பார்ப்பும் எம்மிடம் இல்லை. அவ்வாறென்றால் எமது நாட்டு மக்களுக்காக இந்தப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். நீண்டகாலம் நான் அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டவர் என்பது தேசிய மக்கள் சக்தியினருக்கு தெரியும். எந்தளவு நேர்மையாகவும் நம்பிக்கையுடனும் அவர்களுடன் செயற்பட்டேன் என்பது அவர்களுக்கு தெரியும். என்றாவதொரு நாள் இந்த நாடு முன்னேற்றமடைவதை பார்ப்பதற்கு எனக்கும் ஆசை இருந்தது. அதன் காரணமாகவே கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் தலையீடு செய்து நாட்டை முன்னேற்றக்கூடிய விதத்தில் எங்களின் பங்களிப்பை வழங்கினோம். இருந்தபோதும் எனது பழைய நண்பர்களே என்னை தாக்கி பேசுகிறார்கள் எனும்போது கவலையளிக்கிறது. அது பொருத்தமற்ற விடயமாகும். நான் தேசிய மக்கள் சக்தியின் எதிரியல்ல. நண்பன் என்பதை கருத்தில்கொள்ள வேண்டும்'' என்றார்.

## பெண் வைத்தியர்...

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றிய பெண் வைத்தியர் பலவந்தமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

போதனா வைத்தியசாலையிலிருந்து அவர் விடுதியை நோக்கிச் சென்றபோது கூரிய கத்தி ஒன்றை காண்பித்து அச்சுறுத்தல் விடுத்த நபரொருவர் இந்த துன்புறுத்தலை மேற்கொண்டதாக சம்பந்தப்பட்ட பெண் வைத்தியர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

**அமைச்சர் ஆனந்த கண்டனம்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றிய பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபராக இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற நபர் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால உறுதியளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை(11) இடம்பெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அநுராதபுரம் வைத்தியசாலையில் சேவையில் இருந்த பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்னவென்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு உறுதியளித்த அமைச்சர் மேலும் பேசுகையில்,

''அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் எடுத்துரைத்தார். இச்சம்பவம் கவலைக்குரியது. குற்றவாளியை கைது செய்வதற்கு ஐந்து விசேட பொலிஸ் பிரிவுகள் ஊடாக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். சந்தேக நபர் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்.

இதேவேளை, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவல்களுக்கு அமைவாகவே மாத்தறைப் பகுதி வீடொன்று சோதனை செய்யப்பட்டது. குற்றப்புலனாய்வு அதிகாரிகள் அந்த வீட்டுக்குச் சென்று தமது அடையாள அட்டையை காண்பித்து, தாம் வருகை தந்தமைக்கான காரணத்தை குறிப்பிட்டுள்ளனர்.

வீட்டைச் சோதனையிடுவதற்கு வீட்டில் இருந்தவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர். இது முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நம்பத்தகுந்த தகவல்களுக்கமைவாகவே நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமக்கு கிடைக்கும் தகவல்களை அலட்சியப்படுத்த முடியாது'' என்றார்.

**எதிர்க்கட்சித் தலைவர்**

**சஜித் கண்டனம்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை வளாகத்தில் வெளிநபர் ஒருவர் கத்திமுனையில் வைத்தியரை அச்சுறுத்தி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சம்பவம் தொடர்பில், பாராளுமன்றத்தில் நேற்று (11) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கண்டனம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

''எமது நாட்டின் வைத்தியசாலை வரலாற்றில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருப்பதாக நாங்கள் அண்மைக்காலம்வரை கேள்விப்பட்டதில்லை. அநுராதபுரம் போதனா வைத்தியசாலை அதிகளவான மக்கள் நடமாடும் இடம். நாட்டிலிருக்கும் பெரிய வைத்தியசாலை. கடமையில் இருக்கும்போதே குறித்த வைத்தியர் இந்தச் சம்பவத்துக்கு ஆளாகியிருப்பது பாரிய பிரச்சினையாகும்.

இந்தச் சம்பவத்தின்மூலம் நாட்டில் வைத்தியசாலை வளாகத்தில் பெண் வைத்தியர்களின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினை எழுகின்றது. அநுராதபுரம் வைத்தியசாலையில் இருக்கும் பாதுகாப்பு கூட இல்லாத நூற்றுக்கணக்கான வைத்தியசாலைகள் எமது நாட்டில் இருக்கின்றன. இவ்வாறான சம்பவத்தினால் எமது நாட்டுப் பெண் வைத்தியர்கள் பெரும் அச்சத்துக்கும் அதிர்ச்சிக்கும் ஆளாகியுள்ளனர். கடந்த காலங்களில் வைத்தியர்களுக்கு எதிராக தூண்டிவிடும் ஆத்திரமூட்டும் நிகழ்வுகள் திட்டமிடப்பட்ட வகையில் இடம்பெற்றன. கோபமூட்டும் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்தச் சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

அத்துடன், தேசிய பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் கதைக்கும்போது அது தொடர்பில் நகைச்சுவை செய்கிறார்கள். கேலிச்சித்திரமும் வரைந்திருந்தார்கள். ஆனால் தற்போது அரச சேவையில் மாத்திரமல்லாது, சேவையில் இருக்கும் பெண் ஊழியர்களுக்கு தங்களின் கடமையைக்கூட மேற்கொள்ள முடியாத கஷ்டமான நிலைக்கு ஆளாகியிருப்பதன் மூலம் உண்மையிலே மக்களின் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. அதனால் பெண் வைத்தியர் ஒருவர் இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியிருப்பது அரசாங்கத்துக்கு தெரியுமா, அப்படியானால் எப்போது தெரிந்து கொண்டது, அது தொடர்பில் எடுக்கப்போகும் நடவடிக்கை யாது?

தொழிற்றுறைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சர்வதேச மகளிர் தினத்தில் இந்த சபையிலும் வெளியிலும் நாங்கள் கதைத்து நிகழ்வுகளை மேற்கொண்ட நிலையில், இவ்வாறான சம்பவத்தினால் பெண்கள் நிர்க்கதியானதொரு நிலைக்கு ஆளாகியுள்ளனர். எனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் அனைவருக்கும் பாரிய உணர்வு இருக்கிறது. ஆனால் உணர்வுகள் மாத்திரம் இருந்து போதாது. இந்த நாட்டில் வைத்தியர்கள் உள்ளிட்ட பெண்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நாங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவும் இச்சம்பவம் கடமை நிலையத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம். அதனால் இந்தச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன, என்பதுடன் வைத்தியசாலைகள் உள்ளிட்ட தொழிற்சாலைகளில் கடமை புரியும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மாசி மாதம் 28ம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** உங்கள் மனக்குறையை மற்றவர்களிடம் கொட்டிவிடுவீர்கள். பிள்ளைகளால் மனக்கவலை அடைவீர்கள்.

**ரிஷபம்** வீடு வாகனங்களால் சற்று செலவுகள் அல்லது தொல்லைகள் உண்டு. ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

**மிதுனம்** இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள். எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**கடகம்** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள். சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**கன்னி** தேவையற்ற அலைச்சல்களால் விரக்தி அடைவீர்கள். உங்கள் பணம், பொருள் நஷ்டமேற்படலாம்.

**துலாம்** போட்டிப் பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள். தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

**விருச்சிகம்** தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

**தனுசு** உடல் உழைப்பு அதிகமாக தேவைப்படும் நாள். எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரம்** திட்டமிட்ட காரியத்தை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளை சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

**கும்பம்** உங்கள் பங்குதாரர்களால் அதிக இலாபங்களை அடைவீர்கள். காதலில் வெற்றி வாகை சூடுவீர்கள்.

**மீனம்** நண்பர்களோடு சந்தோஷமாக விருதுண்ணுவீர்கள். நீண்ட நாள் கடன் இன்று தீரப்போகிறது.

**திதி** : திரயோதசி மு.ப.9.11 வரை பின் சதுர்தசி
**நட்சத்திரம்** : மகம் பி.இ.4.05 வரை பின் பூரம்
**பிறை** : வளர் பிறை
**யோகம்** : மரண யோகம் பி.இ.4.05 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : காலை 6.18–7.48 மணி வரை காலை 9.18 – 10.18 மணி வரை பகல் 1.48 – 3.18 மணி வரை மாலை 4.18 – 5.18 மணி வரை
**ராகு காலம்** : 12.18–1.48மணி வரை
**எமகண்டம்** : 7.48– 9.18 மணி வரை
**குளிகை** : 10.18–12.18 மணி வரை
**சந்திராஷ்டமம்** : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 4.05 மணி வரை**
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம்,புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம்,அவிட்டம்,பூரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 4.05மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம்,உத்திரம்,அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**விஷேட தினம்** : நடேஷர் அபிஷேகம், மாசி மகம், மாத்தளை முத்துமாரியம்மன் தேர்.

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடையடைப்பு

## தீர்வு கிடைக்காவிடில் தொடர் போராட்டமென எச்சரிக்கை



கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் நேற்று (11) பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முழு கடையடைப்பு போராட்டத்தை மேற்கொண்டதுடன், தமக்கான உரிய தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பெற்றுத் தர வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

அந்த கோரிக்கைகளாவன,

01. தற்காலிகமாக தகரக் கொட்டகைகளில் நீண்டகாலமாக வர்த்தகத்தில் ஈடுபடும் புடவை, அழகுசாதன மற்றும் ஏனைய வர்த்தகர்களுக்கு நிரந்தரக் கட்டடம் வழங்குவதாக பலதரப்பினராலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை காலமும் அவை நிறைவேற்றப்படவில்லை. தற்போது உலக வங்கியின் அனுசரணையில் ரூ.40 மில்லியன் நிதியில் மேற்படி வர்த்தகர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கரைச்சி பிரதேச சபையால் திட்டமிடப்பட்டு 08 கடைகள் அமைக்கப்பெற்று தற்போது வர்த்தகர்களுக்கு எதுவித பயனுமின்றி விலைமனுக் கோரல் மூலம் (டென்டர்) கடைகளை வழங்க பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளமையானது வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை மீறும் செயலாகும்.

02. வட மாகாண பிரதம செயலாளர் தலைமையில் 04.06.2024 அன்று வர்த்தகர் அபிவிருத்திச் சங்க மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி இணக்கம் காணப்பட்ட தற்காலிக கடைகளை A9 வீதியையும் கனகபுர வீதியையும் பார்க்கக் கூடியவாறு வழங்குதல் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

03. ஏற்கெனவே அரச திணைக்களத்தால் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் பிரகாரம் கிளிநொச்சி சந்தை வர்த்தகர்களுக்கு கடைகள் வழங்குவதாகவே உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. இவ்விடயத்தில் வர்த்தகர்களாகிய நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

04. பொதுவாக கிளிநொச்சி சந்தையின் பிரதான மரக்கறி, மீன், புலால், பழ வாணிபம் போன்றவற்றுக்கு இடையூறாக சந்தையை அண்மித்த பகுதிகளில் மேற்படி வியாபாரங்களை மேற்கொள்ள கரைச்சி பிரதேச சபை அனுமதித்துள்ளமையால் சந்தை வர்த்தகர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

05. அம்பாள்குளத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் மொத்த வியாபாரம் எனப் பெயரிடப்பட்டு தற்போது அங்கு காலை 5.00 மணி தொடக்கம் மாலை 10.00 மணி வரை சில்லறை வியாபாரம் நடைபெற்று வருதலும் அங்கு வரிநடைமுறை பின்பற்றப்படாமையால் சந்தைக்கு உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் வருகை தரும் வீதம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

06. கிளிநொச்சி சந்தையின் மரக்கறி, வெற்றிலை,மீன், பழம் என அனைத்து வாணிபங்களுக்கும் 4% சதவீத வரி அறவீட்டால் உற்பத்தியாளர்களின் வருகையும் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் குறைந்துள்ளது.

07. கிளிநொச்சி சந்தையை அண்மித்த பகுதியில் நடைபெறும் நடைபாதை வியாபாரங்களால் சந்தை முற்றுமுழுதாக செயல் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

08. கரைச்சி பிரதேச சபையால் நிரந்தர கட்டடங்களுக்கான முறையற்ற திட்டமிட்ட வாடகை அதிகரிப்பும் சந்தை வர்த்தகர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்நிலையிலேயே சந்தையின் வர்த்தகர்களுக்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை போன்ற விடயங்களை முன்வைத்து வர்த்தகர்கள் கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கான உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை சுழற்சி முறையில் மேற்கொள்ளவுள்ளதாகவும் தமக்கான உரிய தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பெற்று தர வேண்டுமென்று இதன்போது போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

## மருத்துவ அதிகாரிகளின் வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கால அவகாசம் நீடிப்பு

தரவரிசைப்படுத்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

தரவரிசைப்படுத்தப்பட்ட மருத்துவர்களின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுவரும் நிலையில், அந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பின் படி, அனைத்து விண்ணப்பங்களும் ஆன்லைன் முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ள அனைத்து மருத்துவ அதிகாரிகளும் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2025/03/24 வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் https://hrmis.health.gov.lk/ms/ என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலுக்காக முல்லைத்தீவில் கட்டுப்பணத்தைச் செலுத்திய தமிழரசுக் கட்சி



*விஜயரத்தினம் சரவணன்*

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியால் நேற்று (11) செலுத்தப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்குரிய கட்டுப்பணமே செலுத்தப் பட்டுள்ளது.

அந்தவகையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களான இரத்தினம் ஜெகதீசன், கிருஷ்ணபிள்ளை சிவகுரு ஆகியோரும் இதில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதியரசர்கள் நியமனம்







மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மூன்று புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று (11) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான டபிள்யூ. கே. எஸ்.யு.பிரேமச்சந்திர, கே.பிரியந்த பெர்னாண்டோ, ஏ.பிரேமசங்கர் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு புதிய நீதியரசர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.



**நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா நேற்று (11) நடைபெற்றது. இதன்போது கலந்துகொண்ட பக்தர்களுக்கு வழங்குவதற்காக 'தமிழன்' பத்திரிகை ஆலய பூசகரிடம் கையளிக்கப் பட்டது.** **படம்:** *அருணாசலம் லெட்சுமணன்*

# ஜனாதிபதிக்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (11) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

மதுவரித் திணைக்களம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் இந்த ஆண்டின் வருமான இலக்குகளை அடைவது போன்ற விடயங்களை நோக்கமாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

வரி சேகரிப்பில் செயற்றிறன் மற்றும் நியாய போக்கு என்பவற்றை உறுதி செய்வதற்காக மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணைப்பது குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

மதுபானம் மற்றும் புகையிலைத் தொழிற்றுறையை முறையாக ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரச வருமானத்தை அதிகரித்தல், சட்டபூர்வமான வருமானத்தை உருவாக்குவதற்கு வசதிகளை வழங்குதல், சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கக் கூடியவற்றை அமுல்படுத்தல், சட்டவிரோத மதுபானம், அபாயகர ஔடதங்கள் மற்றும் மனோவியல் ஔடதங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக தீவிர விழிப்புணர்வுத் திட்டங்களை செயற்படுத்துதல், தரமற்ற மதுபானங்களை அருந்துவதால் ஏற்படும் உடல்நலக் கேடுகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதை உறுதி செய்தல் ,நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு உதவுவதற்காக, நாட்டில் மதுபானம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட மதுபானங்களை செயற்றிறன் மிக்கதாகவும் பயனுள்ள முறையிலும் கட்டுப்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மூலோபாய மற்றும் செயற்பாட்டு மட்டங்களில் பயனுள்ள முடிவுகள் எடுத்தல்,முகாமைத்துவ முறைமைகள் ஊடாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் வருமானப் பாதுகாப்பு குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக மனிதவள அபிவிருத்தித் திட்டம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி வழிகாட்டல் திட்டமொன்றை தயாரிப்பதன் அவசியம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மதுவரி ஆணையாளர் நாயகம் உதய குமார பெரேரா உட்பட மதுவரித் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஐ.நாவின் திட்ட சேவைகள் பிரிவின் அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் கலந்துரையாடல்



ஐக்கிய நாடுகள் சபையின் திட்ட சேவைகள் பிரிவின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் சார்ள்ஸ் கெலனன், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருடன் நேற்று (11) சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பு, மாளிகாவத்தையிலுள்ள அமைச்சில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஐ.நாவின் திட்ட சேவைகள் பிரிவில் தெற்காசியாவுக்கு பொறுப்பாகவுள்ள முக்கிய பல அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வு பொறிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர்களுக்குரிய திட்டங்கள் மற்றும் அதற்கான ஐ.நாவின் பங்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

அதேபோல அபிவிருத்தி துறைகளில் ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் பிரிவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது சம்பந்தமாகவும் அவதானம் செலுத்தப்பட்டது.

நாட்டில் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வு சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேலும் இலங்கையின் பல்வேறு திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் பிரிவு வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (11.03.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 180.8604 | 190.1942 |
| கனேடியன் டொலர் | 200.5276 | 209.1010 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3594 | 41.9279 |
| யூரோ | 314.3085 | 327.1240 |
| ஜப்பான் யென் | 1.9710 | 2.0490 |
| சிங்கப்பூர் டொலர் | 216.7527 | 226.6832 |
| ஸ்ரேலிங் பவுன் | 373.8694 | 387.9400 |
| சுவிஸ் பிராங்க் | 328.6757 | 343.9410 |
| ஐ.அ. டொலர் | 291.2609 | 299.8003 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.7390 |
| குவைட் | குவைட் தினார் | 958.7877 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.4834 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0672 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7625 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.4481 |

Follow us:
தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச், 12ஆம் திகதி, புதன்கிழமை

# கவனிக்கப்பட வேண்டிய மனோ கணேசனின் கருத்து

கொழும்பிலுள்ள பிரபல தேசிய பாடசாலைகளில் தமிழ்ப் பிரிவுகளில் வகுப்புகள் திட்டமிட்டு குறைக்கப்படுகின்றன. இது, பல்லின மக்கள் வாழும் இங்கு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவிருக்கும் வாய்ப்பை இல்லாமலாக்கும் செயலாகுமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்திருப்பது எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் நிதியொதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மனோ கணேசன் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலிருக்கும் பிரதான கல்லூரிகளான ரோயல், இசிபத்தன மற்றும் டி.எஸ். ஆகிய மூன்று கல்லூரிகளிலும் தமிழ்ப் பிரிவு இருந்து வருகிறது. ஆனால், படிப்படியாக இந்த வளம்மிக்க தேசிய பாடசாலைகளில் தமிழ் பிரிவு வகுப்புகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் சிங்கள மொழி மூல 8 வகுப்புகள் இருக்கும் நிலையில், தமிழ்மொழி மூலம் 2 வகுப்புகளே இருக்கின்றன. அதே பாடசாலையில் கனிஷ்ட பிரிவில் தரம் 6 தொடக்கம் 11 வரையில் சிங்கள மொழி மூலம் 7 வகுப்புகள், தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகள் ஆங்கில மொழி மூலம் 6 வகுப்புகள் இருக்கின்றன.

ரோயல் கல்லூரியின் உயர்தர கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவில் சிங்கள மொழி மூலம் 14 வகுப்புகள், தமிழ்மொழி மூலம் 2 வகுப்புகள், ஆங்கில மொழி மூலம் 2 வகுப்புகள், உயர்தர வர்த்தகப் பிரிவில் சிங்கள மொழி மூலம் 5 வகுப்புகள், தமிழ்மொழி மூலம் ஒரு வகுப்பு, ஆங்கில மொழி மூலம் ஒரு வகுப்பு என இருக்கின்றன.

டி.எஸ். சேனநாயக்க கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் சிங்கள மொழி மூலம் 6 வகுப்புகள், தமிழ் பிரிவில் ஒரு வகுப்பு, கனிஷ்ட பிரிவில் 6 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை சிங்கள மொழி மூலம் 7 வகுப்புகள், தமிழ் மொழி மூலம் 2 வகுப்புகள், ஆங்கில மொழி மூலம் 2 வகுப்புகள் இருக்கின்றன.

இந்தப் பாடசாலையின் உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவில் சிங்கள மொழி 4 வகுப்புகள், தமிழ் மொழி ஒரு வகுப்பு, ஆங்கில மொழி 2 வகுப்புகள். உயர்தர வர்த்தகப் பிரிவில் சிங்கள மொழி 4 வகுப்புகள், தமிழ் மொழி ஒரு வகுப்பு, ஆங்கில மொழி 2 வகுப்புகள் இருக்கின்றன.

இசிபத்தன கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் சிங்கள மொழி மூல 6 வகுப்புகள், தமிழ் பிரிவில் ஒரு வகுப்பு, கனிஷ்ட பிரிவில் 6 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை சிங்கள மொழி மூலம் 6 வகுப்புகள் தமிழ் மொழி ஒரு வகுப்பு, ஆங்கில மொழி ஒரு வகுப்பு. இந்தப் பாடசாலையின் உயர்தரப் பிரிவில் சிங்கள மொழி 6 வகுப்புகள் தமிழ் மொழி ஒரு வகுப்பு என்றவாறே காணப்படுகின்றன. இது மிகவும் பாரபட்சமான நிலைப்பாடாகும்.

சிறந்த வளங்கள் காணப்படும் ரோயல், இசிபத்தன, டி.எஸ். ஆகிய கல்லூரிகளில் தமிழ் மொழி வகுப்புகளை அதிகரிக்க வேண்டும். ஆனால், சில அதிகாரிகள் ஒன்றுபட்டு இந்தக் கல்லூரிகளில் தமிழ் வகுப்புகளை திட்டமிட்டுக் குறைக்கிறார்கள். அது மாத்திரமன்றி, ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் இருக்கமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் - இடமிருக்கின்றபோதும் மாணவர்களை அந்த வகுப்புகளில் சேர்ப்பதில்லை. இந்தச் சம்பவம் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. நாங்கள் ஆட்சி செய்துவந்த காலத்திலும் இருந்து வந்தது. அப்போது இது தொடர்பாக அன்றைய கல்வி அமைச்சருடன் நான் சண்டையிட்டிருக்கிறேன். அதனால் இந்த விடயங்களைப் போராடியே பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

அதனால் இந்த அரசாங்கம் அதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒரு கூரையின் கீழ் படிக்க முடியுமான சூழலை ஏற்படுத்த வேண்டும். அதனை முதலில் பிரபல பாடசாலைகளில் ஆரம்பியுங்கள். கொழும்பில் அதனைச் செய்ய முடியுமென்று சுட்டிக்காட்டியுள்ளார் மனோ கணேசன் எம்.பி.

மூவினங்கள் செறிந்து வாழும் வர்த்தக தலைநகரமான கொழும்பிலேயே இந்த நிலைமையென்றால் இதர இடங்களில் தமிழ் பாடசாலைகளின் நிலைமை எப்படியிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதாகத்தான் இதனைக் கொள்ளவேண்டியிருக்கிறது.

கடந்த வருடம் கல்வியமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்த பாடசாலை இடைவிலகல் மாணவர்கள் குறித்து புள்ளிவிபரமொன்றை பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். 2012 இல் 39,899 ஆக இருந்த பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களின் எண்ணிக்கை 2021 இல் 19,924 ஆகக் குறைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். 2012 இல் 39,899 மாணவர்களும் 2013 இல் 37,687 மாணவர்களும் 2014 இல் 34,358 மாணவர்களும் 2015 இல் 30,055 மாணவர்களும் 2016 இல் 31,539 மாணவர்களும் 2017 இல் 28,225 மாணவர்களும் 2018 இல் 26,077 மாணவர்களும் 2019 இல் 27,590 மாணவர்களும் 2020 இல் 22,765 மாணவர்களும் 2021 இல் 19,924 மாணவர்களும் இடைவிலகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2020 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் காணப்பட்ட நெருக்கடி நிலைமைகளை விடவும் 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொவிட் தொற்று, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பாடசாலைக் கல்வி கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டது. இதனால் அதிகமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் நிலையும் உருவானது. மாறாக, பல பாடசாலைகள் தங்களுடைய பாடசாலைப் பரீட்சைப் பெறுபேறுகளை உயர் வீதத்தில் காட்டுவதற்காக திட்டமிட்டு மாணவர்களைப் புறக்கணித்தமையும் இடைவிலகல்களைத் தூண்டியது.

மனோ கணேசன் எம்.பி. பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய இந்தப் பாரபட்சமும் மாணவர்களின் இடைவிலகலுக்கு ஏதுவாக அமைந்திருக்குமோ என்ற சந்தேகம் இப்போது எழுகிறது. கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளில் தமிழ் மொழி மூலமான வகுப்புகள் இருப்பது கொழும்பிலுள்ள மாணவர்களுக்கு மட்டுமல்ல, பின்தங்கிய பகுதிகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயிலவும் வரப்பிரசாதமாக அமைகிறது. ஆனால், அந்த வகுப்புகள் இனப் பாகுபாடு காரணமாகப் பிரிக்கப்படுமானால் மாணவர்கள் எங்கு செல்வது ? எனவே, கல்வி அமைச்சர் பதவியை வைத்திருக்கும் ஹரிணி இந்த விடயத்துக்கு முக்கியத்துவமளித்து கவனிக்க வேண்டும்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமான ஒரு மாவட்டமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகிறது.

சிங்கள, தமிழ் முஸ்லிம்கள் என பல இனங்கள் ஒன்றாக வாழ்கின்ற இடங்களில்தான் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க முடியும். பல்லின மக்கள் வாழும் இந்தப் பிரதேசங்களில் நாங்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என அமைத்துவிட்டு, சிறு வயதிலேயே மாணவர்களை சிங்களம், தமிழ், முஸ்லிம் எனப் பிரித்துவைத்து அவர்கள் 18 வயதான பின்னர் நீங்கள் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றாக எழுந்து நிற்க வேண்டுமெனத் தெரிவித்தால் அது சாத்தியமாகப்போவதில்லையென்ற கருத்தில் நியாயம் உள்ளது.சில அதிகாரிகள் ஒன்றுபட்டு இந்தக் கல்லூரிகளில் தமிழ் வகுப்புகளைத் திட்டமிட்டு குறைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஆராயப்பட்டு அப்படி செய்பவர்கள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

# வீட்டில் சமைத்த உணவா பீட்சாவும் பேர்கருமா

## சிறந்தது எது...

முன்பெல்லாம் அம்மாவோ பாட்டியோ சமைத்த உணவுகள் மிகவும் ருசியாகவும் ஆரோக்கியமாகவும் சத்துமிக்கதாகவும் இருக்கும். ஆனால், இன்றைய குழந்தைகளுக்கு சத்தான, சுவையான உணவு என்ன என்பதே தெரிவதில்லை. முன்னர் நாம் சாப்பிட்ட உணவுவகைகளை சமைத்துக் கொடுத்தாலும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. காரணம், பீட்சாவும் பர்கரும் தான் அவர்களின் பிரதான உணவாகிவிட்டன.

நாமும் நஞ்சில்லா காய்கறிகளை கொடுக்கத் தவறிவிட்டோம். நம் தாத்தாவும் பாட்டியும் கூட நோய் நொடியின்றி 70 வயதிலும் ஓடி ஆடி சுறுசுறுப்புடன் உழைத்ததைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இன்று 25 வயதிலேயே பிள்ளைகள் சோர்ந்து ஓரிடத்தில் அமர்ந்திருப்பதையும் உற்சாகமற்றும் காணப்படுகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் கல்வி வளர்ச்சி, நவீன வசதிகள் யாவும் இருக்கின்றன. ஆனால், ஆரோக்கியம் போன இடம்தான் தெரியவில்லை. யாரிடம் பேசினாலும் நீரிழிவு நோய், ஆஸ்துமா, இரத்தசோகை , உடல்பருமன், மூட்டு வலி, கால் கை குத்து, உளைச்சல் எனச் சொல்கிறார்கள். நம் பயணம் எதை



நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது?

இதற்கெல்லாம் காரணம், நம்முடைய உணவுப் பழக்கவழக்கம் தான். நாம் பயன்படுத்தும் அனைத்து காய்கறிகளும் பழங்களும் கீரைகளும் இரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகளைப் பயன்படுத்தி வளர்க்கப்பட்டுக் கிடைத்தவையே. நாமும் நம் குழந்தைகளுக்கு சத்துள்ள உணவுகளைக் கொடுப்பதாக நினைத்துக் கொள்கிறோம். ஆனால், இவையெல்லாம் எப்படி விளைவிக்கப்படுகின்றன என்பதைச் சிந்தித்திருக்கிறோமா? நம்மில் எத்தனைபேருக்கு இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு இருக்கிறது?

இரசாயன உரங்களைப் பயன்படுத்தாமலும் காய்கறிகளை விளைவிக்க முடியுமென்று உங்களுக்குத் தெரியுமா? இயற்கை பூச்சிவிரட்டிகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெறமுடியுமென்பது தெரியுமா?

நாமெல்லாம் விளம்பரம் என்ற மாய வலையில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். இயற்கை விவசாயத்தில் விளைவிக்கப்பட்டதென்று விளம்பரம் செய்தால் உடனே நாம் எல்லோரும் அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறோம். இரசாயனத்தில் குளிப்பாட்டி 'பச்சைப் பசேல்' என்று சூப்பர் மார்க்கெட்டில் வைத்திருக்கும் காய்கறிகளையும் பழங்களையும் வாங்க முற்படும் நாம், நேரடியாக விவசாயிகளால் விற்பனை செய்யப்படும் காய்கறிகளை வாங்குவதில்லை.

வாடிய பழங்களையும் சொத்தை விழுந்த காய்கறிகளையும் பார்த்தால் ஏனோ நம் மனதில் ஓர் இளக்காரம். ஆனால், புழுக்கள் உள்ள கத்தரிக்காய் இரசாயன மருந்துகள் தெளிக்கப்படாததென்று எத்தனை பேருக்குத் தெரியும்?

இதற்கெல்லாம் தீர்வுதான் என்ன? பெண்கள் மனது வைத்தால் உலகையே ஆள முடியும்போது இதுவும் சாத்தியமே. வீட்டிலிருக்கும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் மொட்டைமாடியை விவசாய நிலமாக மாற்ற முன்வந்தால் இளைய சமுதாயத்தை நோய்நொடியின்றி வாழ வழியமைக்கலாம்.

வீட்டுக்கு ஒருவர் மாடியிலோ வீட்டிலிருக்கும் தரையிலோ இயற்கை முறையில் விவசாயம் செய்ய முன்வர வேண்டும். மாடித் தோட்டம் அமைக்க அதிக செலவாகுமென்று எண்ணுகிறார்களா? செயற்கை உரங்கள் போட்டால்தான் தாவரங்கள் நன்றாக வளரும் என்று நினைக்கிறீர்களா? அத்தனையும் சூழ்ச்சி. வர்த்தக ரீதியாக நம்மை ஏமாற்றுகிறார்கள். போதிய வெயிலும் தாவரங்களுக்குத் தேவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். செலவே இல்லாமல் மாடித்தோட்டம் அமைக்க முடியும். வீட்டில் அரிசி வாங்கும் கோணிப்பை, உடைந்த குடம், அண்டா குண்டா என்று பழுதடைந்த பொருட்களை எடுத்துக்கொண்டு அதில் துளையிட்டு அருகாமையில் கிடைக்கும் தோட்டத்து மண்ணுடன் காய்கறிக் கழிவுகள், சாம்பல், ஆட்டுப்புழுக்கை, மாட்டுச் சாணம் இட்டு கலந்து பயிரிடத் தொடங்கினால் நம் வீட்டுக்குத் தேவையான காய்கறிகள் ரெடி.....நமக்குக் இலகுவாகக் கிடைத்துவிடும். நஞ்சில்லா - ஆரோக்கியமான - சுவையான காய்கறிகள் நமதாகும்.

விதைகளுக்கு என்ன செய்வதென்று யோசிக்கிறீர்களா? நம் அடுப்பங்கரைதான் விதைக் களஞ்சியம். நம் அடுப்பங்கரை அஞ்சறைப்பெட்டியிலிருந்து முதலில் தொடங்குவோம். கடுகை விதைத்தால் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் கடுகுக்கீரை கிடைக்கும். வெந்தயத்தை ஊறவைத்து விதைத்தால் பத்துநாட்களில் நீரிழிவைக் கட்டுப்படுத்தும் வெந்தயக் கீரை நம் கையில். மல்லியை இரண்டாக உடைத்து விதைத்தால் மணக்க மணக்க சாம்பாரில் போட மல்லித் தழை கிடைத்துவிடும். மிளகாய் வற்றலைக் காய வைக்கும்போது மீந்துபோன விதைகளை மண்ணில் போட்டால் காரசாரமான மிளகாய் கிடைத்துவிடும். மொச்சை, தட்டைப் பயிறு, பாசிப் பயறு, பட்டாணி, முழு கறுப்பு உளுந்து என விதைத்துப் பாருங்கள். இப்படி காய்கறிகளை அறுவடை செய்து மகிழலாம். வீட்டில் பொழுதுபோகும் செயலாகவும் இது அமைந்துவிடும்.

மேலும் வேலி ஓரங்களில் படர்ந்திருக்கும் பிரண்டையை ஒடித்துவந்து வீட்டில் நட்டு வையுங்கள். பத்து நாட்களுக்கு ஒரு முறை அறுவடை பண்ணி மூட்டுவலி, முதுகுவலி பிரச்சினையின்றி வாழலாம். பார்க்கும் இடமெல்லாம் படர்ந்து கிடக்கும் கண்டங்கத்தரிக்கு நம் தோட்டத்தில் ஓர் இடம் கொடுத்துப் பாருங்கள். சுவாசக்கோளாறு, ஆஸ்துமா என அனைத்தும் பறந்துவிடும்.


செடிகளை வளர்த்தால் பூச்சிகள் வருமே என்று கவலைப்படுகிறீர்களா? நம் முன்னோர்கள் எந்த இரசாயனப் பூச்சிகொல்லியைப் பயன்படுத்தினார்கள்? வேப்பங்கொட்டை, வேப்பம் இலை, நொச்சி இலை, புங்கன் இலை, பப்பாளி இலை, பிரண்டை, கற்றாழை என உங்களுக்குக் கிடைப்பனவற்றில் இரண்டு அல்லது மூன்று இலைகளை இடித்து கோமியத்தில் ஊறவைத்து தெளித்தால் பூச்சிகளெல்லாம் போய்விடும். இயற்கை விவசாயத்தில் நாம் பூச்சிகளைக் கொல்வது கிடையாது.பூச்சிகளை விரட்டுகிறோம். இதனால் ஒன்றைச் சார்ந்து வாழும் உணவுச்சங்கிலி முறையும் ஆரோக்கியமாக நடைபெறும்.

இன்றே வீட்டு மாடியை இயற்கை விவசாயத்துக்குப் பயன்படுத்துவோம். ஆரோக்கியமாக நஞ்சில்லாத காய்கறிகளை விளைவித்து வருங்கால சந்ததியை நோயில்லா ஆரோக்கிய வாழ்வுக்கு வழிநடத்துவோம். நம்மில் இருந்து ஒரு மாற்றம் உருவாகட்டுமே... மாற்றத்தை நோக்கிய பயணம் தொடரட்டும்.

நன்றி
- தினமணி

## தவக்காலச் சிந்தனை

### தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்



யூதர்களின் திருவிழா ஒன்று வந்தது. இயேசுவும் எருசலேமுக்குச் சென்றார். எருசலேமில் ஆட்டு வாயிலுக்கு அருகில் ஐந்து மண்டபங்கள் கொண்ட குளம் ஒன்று உண்டு. உடல்நலமற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர், முடக்குவாதமுற்றோர் ஆகியோர் திரளாய்ப்படுத்துக் கிடப்பர்.முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலமற்றிருந்த ஒருவரும் அங்கு இருந்தார்.

இயேசு அவரைக் கண்டு, நெடுங்காலமாக அவர் அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து, "நலம்பெற விரும்புகிறீரா?" — என்று அவரிடம் கேட்டார். "ஐயா, தண்ணீர் கலங்கும்போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை. நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கிவிடுகிறார்" — என்று உடல்நலமற்றவர் அவரிடம் கூறினார். இயேசு அவரிடம், "எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்" — என்றார். உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தார்.

அன்று ஓய்வுநாள். யூதர்கள் குணமடைந்தவரிடம், "ஓய்வுநாளாகிய இன்று படுக்கையை எடுத்துச் செல்வது சட்டத்துக்கு எதிரான செயல்" — என்றார்கள். அவர் மறுமொழியாக, "என்னை நலமாக்கியவரே 'உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்' என்று என்னிடம் கூறினார்" — என்றார்.

## நக்கல் நமசிவாயம்

தலைமறைவாகிய பொலிஸை தேடுறதுக்கு விசேட பொலிஸ் ஒன்றை இன்னும் கொஞ்ச நாளில அமைச்சாலும் அமைப்பாங்க..



## இன்றைய நாளில்...

- 1870 – இலங்கையில் இருந்து முதல் தடவையாக ஐரோப்பாவுக்கு கோப்பி ஏற்றுமதி சுயெஸ் கால்வாய் வழியே மேற்கொள்ளப்பட்டது.
- 1930 – மகாத்மா காந்தி பிரித்தானிய ஆட்சியாளரின் உப்பு ஆதிக்கத்துக்கு எதிராக 200 மைல் நீள தண்டி யாத்திரையை ஆரம்பித்தார்.
- 2003 – சார்ஸ் தொற்றுநோய் குறித்த உலகளாவிய எச்சரிக்கையை உலக சுகாதார ஸ்தாபனம் அதிகாரபூர்வமாக விடுத்தது.

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான

# மாசி மக தேர்த் திருவிழா

## 12.03.2025 சிறப்பிதழ்






CARSON ENTERPRISES
Importers,Stockiest& General Hardware Marchants
14, Quarry Road, Colombo -12. Sri Lanka :carson314@gmail.com
: 0112438963-5 :0112438964 :www.corson.lk



S.k.sons
SKS
Dealers in forage,fetilizeer,Animal Feeds and Medicines
AUTHORISED AGENT FOR PRIMA LIVE STOCK FEEDS
No.25, Wolfendhal Street.colombo-13 011-2433105 077-7396162



இன்று 12.03.2025
மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேர்பவனி
Yale The World's Favorite Lock
Hettich dorset We Understand
நெம்கோ லொக் (பிரைவேட்)லிமிடட்
26B, Quarry Road, Colombo12, /411-D, Rajagiriya Road, Nawala.
Mob:077 7770022/ Tel:011 2432543 / 011 243 2575
E-mail:inquiry@nemcotradingcentre.com/web:www.nemcotradingcentre.com
முத்துமணித் தேரில் பவனி வரும் அருள்மிகு மாத்தளை முத்துமாரியம்மனின் ஆசி அகிலமெங்கும் கிடைத்திட வேண்டுகின்றோம்.

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சிறப்பு

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றி மலைநாட்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக தமிழக கிராமங்களிலிருந்து இங்கு அழைத்துவரப்பட்ட மக்கள் குடியேறிய 'மலையகம் – 200 ஆண்டு' நிறைவை அகிலம் நினைவுகூர்ந்து ஆவணப்படுத்தும் இவ்வேளையில், மலையக மக்களின் ஆரம்பகால வரலாற்றுடன் இணைந்த மாத்தளை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் சரித்திர முக்கியத்துவத்தையும் சான்றுகளையும் நிலைநிறுத்துவது காத்திரமானதும் காலத்தின் கட்டாய கடமையுமாகும்.

***வரலாறு***

1815இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆங்கிலேயர், மத்திய மலைநாட்டின் தரைத்தோற்றம், சுவாத்தியம் என்பவற்றுக்கேற்ப கோப்பி, தேயிலை, இறப்பர் ஆகிய பணப்பயிர்களைப் பெருந்தோட்டங்களாகப் பயிரிட முடிவு செய்தனர்.

மலைநாட்டுக்குள் புகுந்து தோட்டங்களை அமைக்கவும் பாதைகளை அமைக்கவும் காடுகளை அழித்து மண்ணைப் பதப்படுத்தி பெருந்தோட்டங்களை உருவாக்கவும் பெருந்தொகையான மலிவான கூலிக்கு கடும் உழைப்பாளிகள் தேவைப்பட்டனர். இதற்காக அண்மையிலுள்ள தமிழகத்திலிருந்து பெருந்தொகையான கிராமவாசிகள், கங்காணிமார்களால் ஆசை வார்த்தைகள் கூறப்பட்டு – போலி வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு – தொழிலாளர்கள் திரட்டப்பட்டு கால்நடையாக தனுஷ்கோடி, இராமநாதபுரம், தொண்டி, முசிறி ஆகிய துறைமுகங்களில் படகு மூலம் ஏற்றப்பட்டு பின்னர் அரிப்பு, வங்காலை, மன்னார் ஆகிய இலங்கைத் துறைமுகங்களில் இறக்கப்பட்டு மத்திய மலைநாட்டின் தலைவாசலாகத் திகழும் இன்றைய மாத்தளை மாநகரை வந்தடைந்தனர்.



மாத்தளையின் பண்டைய பெயர் பன்னாகமாகும். 'நாகம்' என்ற சொல்லை 'மலைகள்' என்ற பதத்தில் கம்பர் பாடியுள்ளார். பன்னாகம் என்றால் பல மலைகள் சூழ்ந்த பகுதி என்பது பொருளாகும். ஆம், நாலாபுறமும் அரண் அமைத்ததுபோல் பல மலைகளைக்கொண்ட பகுதி மாத்தளையாகும். மாத்தளை என்ற பெயர் வரக் காரணம், பண்டுகாபய மன்னனின் மாமன் மாதும கிரிகண்டகிரி இளவரசன் இப்பகுதியில் வசித்து வந்தமையால் 'மகாதில பிரதேச' என சூல வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதங்கள் குறுகி மாத்தளை என்ற பெயர் குறிப்பிடப்படுவதும் உண்டு.

இப்பகுதியை ஆண்ட யுவராசன் மாதுல தீ என்ற விசுவாசத்தை உறுதிப்படுத்தியமையால் இப்பிரதேச ஆட்சிக்குட்பட்ட பகுதி மாத்தளை ஆகியது எனக் கோருவோரும் உண்டு.

அன்று சிற்றூராகத் திகழ்ந்த மாத்தளை நகரின் நடு மையத்தில் ஒரு சிறிய அம்மன் ஆலயம் அமைந்திருந்தது. பரந்து விஸ்தாரமான அழகு மலைக்கு கிழக்கே பெரும் பொட்டலாக அமைந்த பகுதிதான் முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்த பகுதியாகும். வழிப்பயணத்தில் மடிந்தவர்கள் போக எஞ்சியோர் அம்மன் ஆலய பொட்டலில் வந்து தங்கினர். வாடிய பயிர்களைக் காக்கும் மாரி மழை போன்ற அன்னை, தன் காலடியில் வந்து தஞ்சம் புகுந்தோரை அபயமளித்து காத்தருள் புரிந்தாள். அன்று அவள் விளைவித்த அற்புதங்கள் பலவாகும். அம்மன் ஆலயத்துக்கு மேற்கே இந்திரனின் ஐராவதம்போல் வெண்பஞ்சு மேகங்களால் போர்த்தப்பட்டிருக்கும்.

அழகு மலையிலிருந்து குற்றாலம் என ஆறு அருவிகள் வெள்ளிக்கம்பிகள் இழுத்தாற்போன்று கட்டுக்கடங்காமல் அள்ளிக் கொட்டி அவை ஒன்றாகக்கூடி கிழக்கு நோக்கி ஓடி சுதுகங்கை ஆற்றில் கலக்கின்றது. அவ்வாற்றங்கரையில்தான் பின்னர் வந்து குடியேறியவர்கள் சிவகங்கை சீமை காளையார் கோயிலிலிருந்து 'பிடிமண்' எடுத்துவந்து அருள்மிகு ஏழுமுக காளியம்மன் கோயிலை அமைத்தனர். அழகு மலையிலிருந்து அருள் வெள்ளமாகப் புறப்பட்ட நீரோடையின் கரையில் வடக்கு நோக்கி வீற்றிருக்கும் அம்மனுக்கு சமாந்தரமாக ஒரு வில்வமரம் பச்சைப்பசேலென ஓங்கி வளர்ந்திருந்தது. அம்மன் காலடியில் ஒன்றுகூடிய மக்கள் ஆறுதல் பெற்று அம்மனின் அருளில் திளைத்தனர்.

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஆலயத்தில் மகா மண்டபம், வசந்த மண்டபம் உட்பட உள்வீதியில் பிள்ளையார், விஷ்ணு, முருகன் சந்நிதானங்களுக்கும் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியருக்கருகில் தில்லை நடராஜர் பெருமானுக்கும் முன்னாள் நாயன்மார்கள் நால்வரின் சிலைகளும் லிங்கேஸ்வரர், முத்துமீனாட்சி, தட்சணாமூர்த்தி, மேற்கு நோக்கிய வைரவர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரி ஆகியோருக்கும் தனித்தனி சன்னிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்தின் வசந்த மண்டபத்துக்கு முன்பாக பாரம்பரியமான தலவிருட்சம் வில்வமரம் அமைந்துள்ளது.

முன்பு இவ்வாலயத்தில் கட்டுத் தேர்கள் இருந்தன. அதன் பின்னர் பஞ்சமூர்த்திகளுக்கும் சித்திர இரதங்கள் அமைக்கப்பட்டன.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது இச்சித்திரத்தேரும் ஏனைய இரதங்களும் எரியூட்டப்பட்டதுடன், கல்யாண மண்டபம் உட்பட பல பகுதிகள் சேதமாக்கப்பட்டு பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

பின்பு அம்பிகையின் அருளால் 10 ஆண்டுகளின் பின் மீண்டும் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதோடு வருடந்தோறும் பஞ்சரத பவனி வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**ஆலய சிறப்பு**

இலங்கையில் ஐந்து இரதங்களைக் கொண்டுள்ள ஆலயம் என்ற சிறப்புக்குரியது இவ்வாலயம்.

இக்கோயிலின் பிரதான வடக்கு நுழைவாயிலுக்கு மேலே அமைந்துள்ள 108 அடி உயரமான நவதள நவகலச இராஜகோபுரமே இலங்கையின் மிக உயரமான முதல் இராஜகோபுரமாகவும் அமைந்துள்ளது.


தமிழ்நாடு, இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த சுமார் 100 வடிவமைப்பாளர்கள், கைவினைஞர்கள் இணைந்து தென்னிந்தியக் கலைஞர் இராமநாதபுரம் திருப்புலானியைச் சேர்ந்த நாகலிங்கம் 'ஸ்டபதி'யும் அவரது மகன் ராமநாதன் ஆகியோரால் 108 அடி உயரமான இராஜகோபுரம் கட்டப்பட்டு 1008 இந்து தெய்வங்களின் சிற்பங்கள் திருக்காட்சியாக இராஜகோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தில் மாசிமகத்தன்று விநாயகர், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், சிவன் – அம்பாள், ஸ்ரீமுத்துமாரியம்மன், சண்டேஸ்வரி ஆகிய தெய்வங்கள் இரதங்களில் எழுந்தருளி இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பஞ்சரத பவனியில் பகலிரவாக பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவ்வாலயத்தில் இன, மத வேறுபாடின்றி பிற மதங்களைச் சேர்ந்தவர்களும் இவ்வாலயத்துக்கு வருகை தந்து அம்பாளின் அருளைப் பெறுகின்றனர்.

இது ஒரு தேசிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

***கலாபூஷணம் மாத்தளை***
***பெ.வடிவேலன்***
















# சக்தியின் திருக்கோலம் முத்துமாரி

**கலாபூஷணம் இ. சியாமளாதேவி வடிவேலன்**



அண்டசராசரங்கள் அனைத்தின் தோற்றத்துக்கும் பெருக்கத்துக்கும் இயக்கத்துக்கும் சக்தியே முழுமுதற் காரணமென்பதை நம் முன்னோர்கள் நன்கறிந்ததுடன், அதனை வழிபாடு செய்தமையும் வரலாறாகும்.

இன வேறுபாடின்றி தொன்றுதொட்டே உலகின் பல பாகங்களிலும் தாய்தெய்வ, சக்தி வழிபாடு சிறந்து விளங்கியமைக்கான சான்றுகள் பல உள்ளன. சிவ வழிபாட்டைப்போன்றே சக்தி வழிபாடும் தொன்மையானதாகும். தாய்தெய்வ வழிபாட்டின் தோற்றத்தை சிந்துவெளி நாகரீக வழிபாட்டுச் சின்னங்களிலேயே அறியலாம். சிந்துவெளி ஆய்வுகள் பெண்தெய்வ வணக்கத்தை நன்கு உறுதிசெய்கின்றன.

நம் வாழ்வில் நிலைத்துள்ள தொன்மை மிக்க சக்தி வழிபாட்டில் பெரும்பான்மை திருக்கோலமாக இன்று விளங்குவது மாரியம்மன் திருக்கோலமேயாகும். தமிழர்கள் எங்கெல்லாம் புலம்பெயர்ந்து சென்றார்களோ, அங்கெல்லாம் மாரியம்மனையும் அழைத்துக்கொண்டே சென்றுள்ளார்கள். இவர்கள் எங்கெல்லாம் குடியேறினார்களோ அங்கெல்லாம் மாரியம்மனையும் அழைத்துக்கொண்டு சென்றுள்ளார்கள். இவர்கள் எங்கெல்லாம் குடியேறினார்களோ அங்கெல்லாம் மாரியும் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ளார். அத்தோடு, இவ்வாலயங்களை மையமாக வைத்தே நம் கலை, கலாசார பாரம்பரியங்கள் வளர்ந்துள்ளன. இவற்றில் முகிழ்ந்தவையே முத்துமாரியம்மனைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள். அம்மன் தாலாட்டுப் பாடல்கள், அம்மன்குலவை, கும்மி, உடுக்கடி, குறிப்பாடல் என்பனவாகும்.

எல்லாம்வல்ல இறைவனின் திருவருளைத் தாயாக வழிபாடுசெய்யும் நெறி சாக்தமாகும். இந்து மதத்தின் உட்பிரிவுகளைக்கொண்டதாகிய சாக்தம், சக்தியை முழுமுதற் கடவுளைக்கொண்டது. வேத காலத்திலேயே சக்தி வழிபாடு இருந்ததென்பதற்கு ரிக் அருளை வழங்கக்கூடியதாகவுள்ளது. வேதத்தில் குறிப்புகள் உள்ளன. நாம் எல்லாம்வல்ல பரம்பொருளைச் சிவனென்றும் அப்பரம்பொருளின் அளவு கடந்த ஆற்றலை சக்தியென்றும் துதிக்கின்றோம். இந்தச் சக்தியை பெண்பாலாகக் கூறுவது மரபு. சக்தி வழிபாடென்பது தொன்றுதொட்டு நிலவிவரும் வழிபாட்டு முறை. அதன் பல்வேறு வகைகளில் ஒன்றுதான் மாரியம்மன் வழிபாடு. நம் வழிபாட்டிலுள்ள ஆண்தெய்வங்கள் தாம் மாத்திரம் தனித்து ஆன்மாக்களுக்கு அருளை வழங்க முடியாது. பெண் தெய்வங்கள் மூலமாகத்தான் நமக்கு அருளை வழங்கக்கூடியதாக உள்ளது. இதுவும் தாய்த்தெய்வத்தின் சிறப்பம்சமாகும்.

மாரி சாதாரண மக்களின் தெய்வம். கடுமையான ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் மந்திரங்கள், ஜெபதபங்களையும் கோராத தெய்வம், நமது தாயைப்போல நம் குற்றங்களையெல்லாம் மன்னித்து, குறைகளையெல்லாம் போக்கி அளவற்ற அன்பைப் பொழியும் நமது தாய்தெய்வம் மாரி. மாரி என்றால் மழை. மழை பயிர்களைக் காப்பதுபோல நம்மைக் காக்கும் கருணை தெய்வம் மாரி. கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து அருள் புரிபவள் அன்னை முத்துமாரி.

ஒரு காலத்தில் பரவியிருந்த இயற்கை வழிபாடு தாய் வழிபாடு. மிகப் பூர்வீகமான வழிபாட்டு முறைகள் பிற்காலத்திலேயே ஆரியகலப்பும் பிராமண சம்பிரதாயங்களிலும் இணைந்து பெரும் நெறியில் சென்று சிறப்புற்று மேலோங்கி வருகின்றது. பிற்காலத்திலும் தற்காலத்திலும் ஏற்பட்டுள்ள வழிபாட்டு முறைகள் என்பனவற்றுக்கு முன்பாக திராவிட தெய்வம் என்று கூறுமளவுக்கு மாரியம்மன் வழிபாடு விளங்கியுள்ளது.

மலையகத்தில் வழக்கிலுள்ள பெரும்பாலான அம்மன் கதைகளில் மாரியம்மன் பிறப்பு முதல் அம்மனின் அருளாட்சி, மாரியம்மன் பெருமை உட்பட அவளது கருணை அருளாசி, அவளின்றி எதுவும் நடைபெற முடியாதென்ற உன்னத நிலையை இவர்கள் உணர்ந்துள்ளனர்.

இதனாலன்றோ நம் ஊர்களிலும் மாரியம்மன் திருவிழாக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாப்படுகின்றன. கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மகேஸ்வர பூஜை, இரத பவனி, தீர்த்தோற்சவம், பூங்காவனம், ஸ்ரீ வைரவர் பூஜையுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது.

இதில் நாமும் கலந்துகொண்டு மற்றவர்களுடன் சேர்ந்து வடம் பிடித்து அம்மனின் அருளாசியைப் பெறுவோமாக!

*மாரி என்றே மழை பொழிந்தே*
*மண்ணுயிர் காப்பவள் நீயே!*
*பயிர்களிலுள்ள பசுமையைக் கண்டேன்*
*பரமேஸ்வரியும் நீயே!*
*உயிர்களிலுள்ள உன்னருள் கண்டேன்*
*உலக மகா சக்தி நீயே!*
*ஏனென்று கேட்டு எம் பசித் தீர்ப்பாய்*
*என் அன்னை முத்துமாரி நீயே!*
*அரண் எனக் காப்பாய்*
*என் அருகில் வருவாய்*
*அகிலாண்டேஸ்வரி நீயே!*
*காஞ்சி காமாட்சி காசி விசாலாட்சி*
*மதுரை மீனாட்சி மாத்தளை*
*முத்துமாரி நீயே!*
*கருணாம்பிகையே*
*கவலையைத் தீர்ப்பாய்*
*தருணம் இதுவே தயை புரிவாய் தாயே!*
*மாத்தளை பதியில் மனமகிழ்வுடனே*
*கோயில் கொண்டருளும்*
*முத்துமாரி தாயே!*
*மாசி மாதத்தில் அரிமாகொடி துவஜ*
*ஆரோகாணம் கண்டே*
*மாசி மகத்தில் தேரில் எழுந்தருளி*
*வருகிறாள் இன்று!*
*பக்த கோடிகள் வடம் பிடித்தே*
*பிரமிக்க வைக்குது எம்மை!*
*அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி*
*முத்துமாரியை*
*தாழ் பணிந்து அருளைப்பெறுவோம்*
*நாமும்!*

***கலாபூஷணம்***
***சியாமளாதேவி இராமநாதன்***




**ஸ்ரீ அம்பிகை ஜோதிட நிலையம்**
*Sri Ambikai Astrologist*
Brahammasri S.Sivanesan Sarma
(Hindu Priest)
தேவி பூஜா ஸேவா துரந்தார், 'ஜோதிடமணி'
'விஸ்வ அபிமானி' 'தேசபந்து', 'சாம ஸ்ரீ'
கலாநிதி சிவஸ்ரீ சிவநேசன் சிவாச்சாரியார் J.P.
அகில இலங்கை சமாதான நீதவான்
(இணைப்பாளர் - சர்வதேச இந்துமத பீடம்)
★ உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகக் குறிப்புகள் எழுதுதல், கிரகசாந்தி, புண்ணிய யாகம் மற்றும் சகல இந்து கிரியைகள் செய்யப்படும்.
★ தேர் சப்பரம், மணவறை, விக்கிரங்கள் மற்றும் கோயில் சம்பந்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் ஓடருக்கு எடுத்துத் தரப்படும்.
No. 162, JEMPETTAH STREET, COLOMBO - 13.
162 ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.
Tel: 011-2440878, 011-3495100 Mobile: 072-28823389








# கரடியனாறு மகா வித்தியாலயத்தில் உணவு ஒவ்வாமையினால் 31 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு மகா வித்தியாலய சிற்றுண்டிச்சாலையில் நூடில்ஸ் வாங்கிச் சாப்பிட்ட 31 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக வாந்தியெடுத்ததையடுத்து கரடியனாறு வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (11) பகல் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், 27 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டு. போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில் சிற்றுண்டிச்சாலையை நடத்திவந்த அதன் உரிமையாளரான பெண் பொலிஸில் சரணடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் சம்பவதினம் காலை இடைவேளை நேரத்தில் சிற்றுண்டிச்சாலையில் இடியப்பம், புட்டு, இட்லி, நூடில்ஸ் ஆகிய உணவுகளை மாணவர்கள் வாங்கிச் சாப்பிட்டுள்ளனர். இந்நிலையில் பகல் ஒரு மணியளவில் சிற்றுண்டிச்சாலையில் உணவு வாங்கி சாப்பிட்ட பல மாணவர்கள் வாந்தியெடுக்கத் தொடங்கியதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து தரம் 06 தொடக்கம் தரம் 10 வரையான 31 மாணவர்கள் கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் பல மாணவர்களுக்கு மயக்க நிலை ஏற்பட்டதுடன் தொடர்ந்து வாந்தியெடுத்ததையடுத்து 27 மாணவர்களை அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றப்பட்டு மட்டு. போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து பாடசாலைக்கு சென்ற பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனையின்போது பழுதடைந்த நூடில்ஸ் விற்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் சிற்றுண்டிச்சாலை நடத்திவந்த பெண் உரிமையாளர் பொலிஸில் சரணடைந்துள்ளதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அடைமழையால் சேறும் சகதியுமாக காணப்படும் தோப்பூர் சந்தைத் தொகுதி

## பொருட்களை கொள்வனவு செய்யமுடியாது நுகர்வோர் சிரமம்

(தோப்பூர் செய்தியாளர்)

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தோப்பூர் வாராந்த சந்தை செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற நிலையில், நேற்று(11) பெய்த அடைமழை காரணமாக வியாபாரிகளும் நுகர்வோரும் மிகவும் சிரமத்துக்குள்ளானதாக விசனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மழை காரணமாக சந்தை சேறும் சகதியுமாகக் காட்சியளித்ததோடு ஆடை வியாபாரிகள் ஆடைகளை விற்கமுடியாது திரும்பிச்சென்றதை அவதானிக்க முடிந்தது. மரக்கறி வியாபாரிகள் மற்றும் பழ வியாபாரிகள் பொருட்களை விற்கமுடியாததால் நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டதாகவும் விசனம் தெரிவித்தமை



குறிப்பிடத்தக்கதாகும்.

மூதூர் பிரதேச சபை வருடாவருடம் தோப்பூர் பிரதேசத்திலிருந்து பெருந்தொகைப் பணத்தை வரியாக அறவிடுகின்ற அதேவேளை, இச்சந்தைத் தொகுதியில் தற்காலிக கொட்டிலாவது அமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் வியாபாரிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்த அரசு நடவடிக்கை

## உணவுப் பாதுகாப்பு பிரதியமைச்சர் ஜெயவர்த்தன

(மட்டக்களப்பு செய்தியாளர்)

நாட்டில் இறக்குமதியை கட்டுப்படுத்தவும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதாக வர்த்தக வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு பிரதியமைச்சர் ஆர்.எம்.ஜெயவர்த்தன தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுதாவளை பகுதியில் அமைக்கப்பட்டு இதுவரையில் முறையாக பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு நேற்று(11) விஜயம் செய்த பிரதியமைச்சர் அங்குள்ள நிலைமைகள் குறித்து நேரில் பார்வையிட்டார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதர் உள்ளிட்ட



பல அதிகாரிகளும் இணைந்திருந்தனர்.

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதியமைச்சர் களுதாவளையில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தைப் பார்வையிட்டு அங்குள்ள குறைநிறைகளை வர்த்தகர்களிடமும் அப்பகுதி விவசாயிகளிடமும் கேட்டறிந்து கொண்டார்.

கிராமிய பொருளாதார அமைச்சால் 300 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் குறித்த பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் முடிவுறுத்தப்பட்டு இற்றைவரையில் அது மக்கள் பாவனைக்கு விடப்படாமல் இருந்து வந்தது. புதிய அரசாங்கத்தின் தலையீட்டின் கீழ் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்துக்கென அமையப்பெற்றுள்ள இக்குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து அப்பகுதி விவசாயிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் வசதி வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்காக பிரதியமைச்சர் அங்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் சமய தீவிரவாதமா?

## கல்முனை பெரிய பள்ளிவாசல் விளக்க அறிக்கை

(மாளிகைக்காடு செய்தியாளர்)

'கல்முனையில் சமய தீவிரவாதம்' எனும் குற்றச்சாட்டு தொடர்பாக கல்முனையின் பிரதான பள்ளிவாசலான கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலும் கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம். சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும் முஸ்லிம் சமூகமும் குறிப்பாக, கல்முனை வாழ் சிவில் சமூகமும் இக்கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர் எனத் தெரிவித்து கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.



BOARD OF TRUSTEES

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, 'அண்மையில் பாராளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராலும் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளராலும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, கல்முனையில் இஸ்லாமிய தீவிரவாதம் மேலோங்கி இருப்பதாகவும் அரசு இது விடயமாக கண்காணித்துக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் கல்முனையின் தாய்ப் பள்ளிவாசலான கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலும் கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம். சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும் முஸ்லிம் சமூகமும் குறிப்பாக, கல்முனை வாழ் சிவில்சமூகமும் இக்கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர்.

எனவே, மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டு தொடர்பாக கல்முனை பிரிவுக்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை கடந்த 06.03.2025 அன்று சந்தித்து குறித்த விடயம் தொடர்பான பூரண விளக்கத்தை எங்களுக்கு தருமாறும் குறித்த இஸ்லாமிய தீவிரவாதம் கல்முனையில் ஆதாரபூர்வமாக செயற்படுமாயின் அதனை முற்றிலும் இல்லாமலாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாக முன்னெடுக்க வேண்டுமென்றும் அதற்கான சகல ஒத்துழைப்புகளையும் எமது ஊர் பள்ளிவாசல்களும் மக்களும் வழங்க தயாராகவுள்ளோம் எனும் உறுதிப்பாட்டை எழுத்து மூலமும் அறியப்படுத்தியுள்ளதோடு இவ்விடயம் தொடர்பில் பொலிஸாரும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டுள்ளோம்.

இது தொடர்பாக மேலதிக கலந்துரையாடலுக்காக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரை எமது ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு அழைத்திருப்பதுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் அனைத்து மாகாண, மாவட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கல்முனையின் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்றையும் மிக விரைவில் ஏற்பாடு செய்து மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

மேலும் கொழும்பிலுள்ள International Advocacy Institution ஒன்றின் துணையுடன் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான உண்மைத் தன்மைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் முன்வைப்பதற்கான மேலதிக ஏற்பாடுகளையும் எமது நம்பிக்கையாளர் சபை முன்னெடுத்து வருகின்றது. எனவே, மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் எமது ஊரின் தாய்ப்பள்ளிவாசல் விரைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதுடன் பொது மக்களாகிய தாங்களும் இவ்விடயத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

# வனவிலங்கு கணக்கெடுப்பு தொடர்பில் விழிப்புணர்வு

(திராய்க்கேணி செய்தியாளர்)

விவசாயப் பயிர்களை சேதப்படுத்தும் வனவிலங்குகளின் தேசிய கணக்கெடுப்பு தொடர்பில் கிராம சேவகர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும் நிகழ்வு நேற்று(11) நடைபெற்றது. உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட்டின் நெறிப்படுத்தலின்கீழ் பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பானின் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிராம நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

இலங்கையில் தற்போது வனவிலங்குகளினால் ஏற்படும் பயிர்ச்சேதம் காரணமாக விவசாயம் பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை நகரசபையை உதுமான்கண்டு நாபீர் தலைமையிலான சுயேச்சைக்குழு கைப்பற்றும்

## நாபீர் பௌண்டேஷனின் ஸ்தாபகர் சூளுரை

(பெரியநீலாவணை மேலதிக செய்தியாளர்)

''எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதனூடாக சம்மாந்துறை நகர சபையை உதுமான்கண்டு நாபீர் தலைமையிலான சுயேச்சைக் குழு கைப்பற்றியே தீரும்''- என நாபீர் பௌண்டேஷனின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை திங்கட்கிழமை(10) இடம்பெற்றது. அதன்பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றிய எமது சமூகத்தின் சிறுபான்மைக் கட்சிகள் இதுவரையில் மக்களுக்கு பயனளிக்கக்கூடிய எந்தவிதமான செயற்பாடுகளையும் மேற்கொண்டதில்லை. மாறாக, அரசியலில் அவர்களின் தனிப்பட்ட மற்றும் கட்சி சார்ந்த ஸ்திரத் தன்மைகளை எவ்வாறு நிலை நிறுத்துவது மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் வருகின்ற வருமானங்களை மக்கள் அபிவிருத்தி என்பதனூடாக எவ்வாறு கையாடல்கள் செய்யலாம் என்பன போன்ற ஊழல் சம்பந்தமான விடயங்களில் தங்களை பலப்படுத்திக் கொண்டார்களே தவிர, இச்செயற்பாடு காரணமாக ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் மக்கள் கைவிடப்பட்டிருக்கின்றார்கள். இவை அனைத்தையும் சீர்செய்வதற்கு ஒரே வழி



மக்கள் புதியதோர் அரசியல் பாதையைத் தெரிவுசெய்வதேயாகும்.

இதற்கு சரியான உதாரணம் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தலாகும். இவற்றின் ஊடாக மக்கள் எதிர்பார்க்கிற ஒரே விடயம் ஊழலற்ற அபிவிருத்தியும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையுமேயாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுவரை காலமும் இனங்களை அடிப்படையாக வைத்து இனவாதங்களை விதைத்து மக்களை உணர்ச்சியூட்டி அரசியலில் வென்று மக்களை நடுத்தெருவில் கைவிட்ட காலங்கள் மக்களிடையே பிற்காலங்களில் சிறுபான்மைக் கட்சிகளிடையிலான கசப்புணர்வை உண்டு பண்ணி கட்சிகளிடையேயான நம்பிக்கையற்ற ஒரு போக்கை உருவாக்கியது.

இதனாலேயே தேசிய கட்சிகள் இன்று ஊடுருவி எமது சமய கலாசார விவகாரங்களிலும் கைவைக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையை உருவாக்கியிருக்கின்றது.

எமது வாக்குகளால் எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு ஐந்து வருடங்கள் கதிரைகளை சூடாக்கி அவர்களது சுகபோக வாழ்க்கைக்கான தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக முன்னெடுக்கப்படுகின்ற இந்த அரசியல் நடவடிக்கைகளை மக்கள் தூக்கியெறிய வேண்டும். இவ்வாறான அரசியல் வியாபாரிகளை மக்கள் ஒருபோதும் ஏற்கக்கூடாது.

அம்பாறை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கீழுள்ள ஒவ்வொரு பிரதேசங்களிலுமுள்ள வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி அவற்றைக்கொண்டு தொழிற்பேட்டைகளை உருவாக்கி படித்த தொழிலற்ற இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து அதனூடாக பிரதேசங்களுக்கிடையிலான அபிவிருத்திகளை மேம்படுத்தி காணப்படுகின்ற வறுமையை 50 வீதத்துக்கு மேலாகக் குறைத்து நிம்மதியான வாழ்வாதாரத்தைக் கொடுக்கின்ற முயற்சியில் நாங்கள் இறங்கியுள்ளோம். இதனூடாக தற்சார்பு பொருளாதாரத்தை வளப்படுத்தி முதலீட்டாளர்களைக் கொண்டு தொழில் முயற்சியாளர்களை கிராமங்கள் தோறும் உருவாக்கி 5,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பற்றவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்குவதே எமது பாரிய திட்டமாக இந்த அரசியல் களத்தில் நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்'' - என்றும் அவர் தெரிவித்தார்.

Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
| --- | --- | --- | --- | --- |
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
| --- | --- | --- | --- | --- |
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209








மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மஹோற்சவ பஞ்சரத பவனியை முன்னிட்டு நேற்று 11ஆம் திகதி காலை சுதுகங்கை ஏழுமுக காளியம்மன் ஆலயத்திலிருந்து காவடி ஊர்வலம், வேல்பூட்டு, பறவைக்காவடி, தீச்சட்டி ஏந்துதல் என்பன ஆரம்பமாகி மாத்தளை பிரதான வீதியூடாக ஆலயத்தை சென்றடைந்து தீமிதிக்கும் வைபவம் நடைபெற்று, விசேட வசந்த மண்டப பூஜையுடன் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

**படங்கள்:** *புசல்லாவை நிருபர்*

# வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



வேலையில்லாப் பிரச்சினைக்கும் கல்வி முறைமைக்குமிடையே நிலவும் பொருத்தமற்ற சுழற்சி இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே காணப்படுகின்றது. அரசியலில் கைக்கூலிகளாக மட்டுமே இருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினை மீண்டும் பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது. வேலையில்லாப் பட்டதாரிகளைத் தொடர்புகொண்டு அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

இந்தப் பின்னணியில் சரியான பதில்களையும் விளக்கங்களையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்ப்பதாக பின்வரும் கேள்விகளைத் தொடுத்தார்.

01. இலவசக் கல்வியின் கீழ் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்நிலை என ஒவ்வொரு நிலைகளுக்கும் ஒரு மாணவருக்கு அரசாங்கம் ஆண்டுக்கு எவ்வளவு தொகையை செலவழிக்கிறது? இது தொடர்பாக அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வேதையும் மேற்கொண்டுள்ளதா?

02. உயர் தரத்தில் கலை, வணிகம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை பயிலும் மாணவர்கள், தங்கள் பட்டப்படிப்பு முடிவடையும் திகதியிலிருந்து வேலை கிட்டும் வரை எடுக்கும் காலம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்த ஏதேனும் ஆய்வுகள் உண்டா? அவ்வாறானால், எடுக்கும் காலத்தை தனித்தனியாகக் குறிப்பிடவும்.

மேலும், இதுவரை 580 சுதேச மருத்துவ பட்டதாரிகள் தங்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்கு தொழிற்பயிற்சி (Internship) வழங்க அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்களுக்குரிய தொழிற்பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

03. வேலையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? இந்தப் பட்டதாரிகளில் வெளிவாரி, உள்வாரி, திறந்த மற்றும் தனியார் பல்கலைக்கழக பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? பட்டதாரிகளின் எண்ணிக்கையை அவர்கள் பெற்ற பட்டப்படிப்புக்கேற்ப தனித்தனியாக முன்வைக்க முடியுமா? தொழில் சந்தையில் நுழைய முடியாமல் எந்த அடிப்படையில் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? இது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட ஆய்வுகள் என்ன? அவற்றை சபையில் முன்வைப்பீர்களா?

04. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 72 ஆவது பக்கத்தில் வேலையில்லாப் பட்டதாரிகள் 35,000 பேருக்கு முறையான ஒழுங்கின் கீழ் துரிதமாக வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், எத்தனை பட்டதாரிகளை இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது? இவர்கள் எந்தெந்தத் துறைகளுக்கு? இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? வேலை தேவைப்பாட்டின் அடிப்படையில், அரசாங்கம் அவர்களை ஏதாவது தகுதி அடிப்படையிலா இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கிறது? இல்லையென்றால், ஏதேனும் போட்டிப் பரீட்சை மூலமாகவா?

05. கலைப் பட்டதாரிகளில் பெரும்பாலானோர் பட்டப்படிப்புக்குப் பிறகு வேலை தேடும் நெருக்கடியிலிருந்து வருவதால் இந்த நிலையை முடிவுக்கு கொண்டுவர இதுவரையில் அரசாங்கம் முன்வைத்துள்ள கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் யாவை?

தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி, இந்தப் பட்டதாரிகளுக்கு 45 வயது வரம்பைப் பொருட்படுத்தாமல் போட்டிப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். இந்த வேலையில்லாப் பட்டதாரிகளைத் தொடர்புகொண்டு, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பிய சந்தர்ப்பத்தில் இதற்கான பதிலை பின்னர் முன்வைப்பதாக ஆளுந்தரப்பினர் தெரிவித்தனர். இதற்கு பதில் வழங்க அரசாங்கம் கால அவகாசம் கேட்பது நியாயமற்றது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட உரையில் இந்த 35,000 பேருக்குமான பதில்கள் இருக்க வேண்டும். இதற்கு பதிலளிக்க அரசாங்கம் கால அவகாசம் கேட்டதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு பதிலளிக்காமல் அரசாங்கம் வேண்டுமென்றே புறக்கணிப்பதாகத் தோன்றுகிறது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.




ரமழான் மாதம் வந்துவிட்டால் வானத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.

(நூல் புகாரி)

நாம் நரகத்திலிருந்து தப்பித்து இலகுவாக சுவர்க்கம் செல்வதற்கான வாய்ப்புகளை அல்லாஹ் ரமழான் மாதத்தில் வைத்திருக்கின்றான். மனிதன் தான் செய்யும் பாவங்களால்தான் நரகத்துக்குச் செல்கிறான். நாங்கள் ரமழானில் செய்யும் வணக்கங்கள் மூலம் நம் பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னிக்கின்றான். சிறு வணக்கங்களுக்கு பன்மடங்கு நன்மைகளை வழங்குகின்றான். எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நன்மையான காரியங்களின்பால் முயற்சிப்போம்.

**(தொழுகை நேரங்கள்)**
**(10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| ஸுபஹ் | - | 5.04 |
| சூரிய உதயம் | - | 6.20 |
| ழுஹர் | - | 12.22 |
| அஸர் | - | 3.38 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |




**01. பஸ்களில் வடிவமைப்புகளை (Design) மாற்றுதல் மற்றும் மாற்று உருவமைப்புகள் (Modification) தொடர்பான சட்ட நிலைமைகள்**

மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முற்கூட்டிய அனுமதியுடன் வாகனங்களின் வடிவமைப்புகளை (Design) மாற்றுதல் மற்றும் மாற்று உருவமைப்புகளை (Modification) மேற்கொள்ளலாம். அதற்கிணங்க, 1983ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மோட்டார் வாகனங்கள் (தயாரித்தல்) கட்டளைகள் அவ்வப்போது திருத்தப்பட்டு, வாகனங்கள் மாற்று உருவமைப்புகள் செய்யக்கூடிய விதங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும், கடந்த காலங்களில் அவ்வாறான கட்டளைகள் மூலம் வெளியிடப்பட்டுள்ள வாகன உதிரிப்பாகங்களைப் பொருத்துதல் மற்றும் வடிவமைப்பு மாற்றங்களுக்கு மேலதிகமாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் உள்ளகப் பொறிமுறை மூலம் பஸ்களை அலங்காரப்படுத்தல் மற்றும் மாற்று உருவமைப்புகளுக்கான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு உள்ளக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும், அதற்குரிய மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கட்டளைகள் வெளியிடப்படவில்லை. அதனால், இவ்வனைத்து நிலைமைகளையும் கருத்திற் கொண்டு பஸ்களின் அலங்காரங்கள் மற்றும் மாற்று உருவமைப்புகளால் பஸ்களில் பயணிக்கின்ற பயணிகளின் பாதுகாப்புக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் பற்றி ஆராய்ந்து, அது தொடர்பாக முறைசார்ந்த வகையில் செயலாற்றுவதற்கு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு உள்ளிட்ட ஏனைய அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**02. காலி புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதிக்கு அருகாமையில் கையகப்படுத்தப்பட்ட காணியில் சட்டத்தரணிகள் அலுவலகக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்**

நீதி அமைச்சின் பயன்பாட்டுக்காக கையகப்படுத்தப்பட்டுள்ள காலி புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள 130 பேர்ச்சஸ் காணியில் காலி சட்டத்தரணிகள் சங்கத்தின் செலவில் சட்டத்தரணிகள் அலுவலகக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான யோசனை 2025.02.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதில் குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக நிலவுகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு விதந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் உள்ளிட்ட ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதித்துவத்துடன் கூடிய அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கும் காலி சட்டத்தரணிகள் சங்கத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**03. சர்வதேச சூரிய மின்சக்திக் கூட்டமைப்புக்கு (ISA) ஆண்டுக்கான ஒத்துழைப்புக் கட்டணத்தைச் செலுத்துதல் மற்றும் இலங்கை மற்றும் சர்வதேச சூரிய மின்சக்திக் கூட்டமைப்புக்குமிடையிலான நாடுகளின் பங்காண்மை பணிச்சட்டகத்தில் (CPF) கையொப்பமிடல்**

சூரிய மின்சக்திப் பாவனையை ஊக்குவிக்கின்ற உறுப்பு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் சர்வதேச சூரிய மின்சக்திக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை உள்ளிட்ட 75 நாடுகள் அதன் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன், 54 நாடுகள் பங்காண்மைப் பணிச்சட்டத்தை ஏற்று அங்கீகரித்துள்ளது. இலங்கைக்குரிய வகுதிக்கான தன்னார்வ ஒத்துழைப்புக் கட்டணமாக வருடாந்தம் 25,000 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும். சூரிய மின்சக்தித் துறையில் குறித்த சூரிய தொழில்நுட்ப உள்ளீட்டு வளங்கள் நிலையம் (STAR – C) மூலம் இயலளவு விருத்தி, கொள்கை மேம்பாடு, நிதி வசதிகளுக்கான அணுகல், உலகளாவிய வலையமைப்பு, அறிவுப் பரிமாற்றம் போன்ற நன்மைகள் சர்வதேச சூரிய மின்சக்திக் கூட்டமைப்பின் மூலம் அதன் உறுப்பு நாடாக இலங்கைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமையும். அதற்கிணங்க, வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள கீழ்க்காணும் யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 1990 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

கைத்தொழில் துறையில் தொழில்நுட்பம், வணிகம், திறன் மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகளுக்குரிய காலத்துடன் தழுவிய தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் கைத்தொழில் கொள்கையை வகுப்பதற்காக தற்போது காணப்படுகின்ற 1990ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையென்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனால், குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2021.03.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் குறித்த சட்டதிருத்தங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சட்டதிருத்தப்பணிகளுக்காக சமகால அமைச்சரவையின் கொள்கை ரீதியான உடன்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென சட்டவரைஞர் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்கமைய, கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையை கருத்திற்கொண்டு குறித்த சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கான பணிகளைத் துரிதப்படுத்திப் பூர்த்திசெய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்கு கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கி திருத்தங்களை மேற்கொள்வதற்காக 2021.01.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்ட வரைஞரால் தற்போது குறித்த சட்டதிருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்காக சமகால அமைச்சர வையின் கொள்கை ரீதியான உடன்பாடு பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, பெருந்தோட்டத்துறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்திற் கொண்டு குறித்த சட்டமூலத்தைத் தயாரிக்கின்ற பணிகளைத் துரிதப்படுத்திப் பூர்த்திசெய்வதற்கு அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

**06. அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமினரை முகாமைத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல்**

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நேர அட்டவணையை அடையாளங் கண்டு, அது தொடர்பாக தேவையின் அடிப்படையில் கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய அளவை அடையாளங்கண்டு அதற்கமைய, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.12.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குழுவுக்கு அந்தந்த அமைச்சுகளால் அவற்றின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் காணப்ப டுகின்ற பதவி வெற்றிடங்களைப் பூரணப்படுத்து வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டு குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக அந்தந்த அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கேகாலை நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தல்**

கேகாலை நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய ஜே.எம்.ஆர்.பீ.ஜயசிங்க 2025.02.01 தொடக்கம் வடமத்திய மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட் டுள்ளமையால் தற்போது கேகாலை மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் பதவி வெற்றிடம் நிலவுகின்றது. குறித்த பதவிக்கு தற்போது பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான எச்.எம்.ஜே.எம். ஹேரத்தை நியமிப்பது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான எச்.எம்.ஜே.எம். ஹேரத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கேகாலை நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபராக நியமிப்பதற்காக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தல்**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய ஆர்.எம்.ஆர்.ரத்னாயக்க 2025.03.03 தொடக்கம் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளமையால் குறித்த பதவி வெற்றிடம் நிலவுகின்றது. குறித்த பதவிக்குப் பொருத்தமான அதிகாரியாக தற்போது வடமேல் மாகாண முதலமைச்சின் செயலாளராகக் கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான டீ.எம்.கே.சீ.திசாநாயக்க அடையாளம் காணப்பட்டுள்ளார். அதற்கமைய, டீ.எம்.கே.சீ. திசாநாயக்கவை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபராக நியமிப்பதற்காக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்

## தேவஸ்தான வருடாந்த பஞ்சரத பவனி

**- 12.03.2025**

**- அருணாசலம் லெட்சுமணன் -**







ஆலயங்களை வெறும் வழிபாட்டுக் கூடங்களாக நாம் எண்ணுவதில்லை. இறைவனின் இருப்பிடமாகவும் இறை வடிவாகவும் எண்ணி வழிபடுகின்றோம். உடலின் ஒவ்வொரு பகுதியும் ஆலயமாகவுள்ளது. அதேபோன்று ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் உயிர்களின் உடலோடு - ஆத்மாவோடு - உயிர்சக்தியோடு தொடர்புடையது. இவ்வகையில் ஈழமணித் திருநாட்டில் இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தின் மகாராணியாக விளங்கும் ஸ்ரீ முத்துமாரியம்பாளின் அருள்சக்தி ஒப்பற்றது. அம்பாள் இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மக்களையும் அரவணைத்து ஆதரிப்பவளாக எம் மாத்தளை மண்ணிலே எழுந்தருளி அருளாட்சி புரிகின்றாள். இராஜ மாதாவாகிய அன்னையின் அருளாசியோடு நடைபெறும் இம்மாசி மகோற்சவ தேர்த்திருவிழா சிறப்புற பண்ணாகம்புரி நிவாசினி அன்னை ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருமென் மலர்ப்பாதம் பணிவோம் - என ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சு.மணி கிருஸ்ணகுமார குருக்களின் வேண்டுதல் அவதானத்துக்குரியது.

மலையக சமூக உருவாக்கத்தில் வழிபாட்டு மரபும் பெரிதும் துணை நின்றமை கவனிக்கத்தக்கது. தொழிற்களங்களை விட மக்கள் ஒன்றுகூடுகின்ற தளமாகவும் கலந்துரையாடுகின்ற களங்களாகவும் வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ளன. சமூக ரீதியிலான தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற வகையில் இவ்வழிபாட்டுக் களங்கள் மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்படுத்துகின்றன. தென்னிந்தியாவில் பெண்தெய்வங்களில் முத்துமாரியம்மன் வழிபாடு முதன்மையானதாக விளங்கியது.

அம் முத்துமாரியம்மன் வழிபாடே இலங்கைக்குப் புலம்பெயர்ந்த மக்களால் முதன்மைப்படுத்தப்பட்டமையும் மலையகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட முத்துமாரியம்மன் ஆலயங்களைக்கொண்டே வழிபடும் மரபு மேலோங்கி காணப்படு கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மாரி என்றால் மழை அல்லது அம்மை நோய் எனப் பொருள்படும். அம்மை நோயை போக்கும் அவதாரமாகவும் மாரியம்மன் வழிபாட்டுக்குரியவளாக அமைகின்ற அதேவேளை, மழையைத் தருகின்ற சக்தி படைத்தவளாகவும் அணுகப்படுவது இவ்வழிபாட்டில் சிறப்பம்சமாகிறது. வெப்பு நோயை ஏற்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தும் அம்மனின் கோபம் குறித்த மக்களின் நம்பிக்கையும் கவனிக்கத்தக்கதாகும்.

செல்வி, செல்லி, ஆத்தாள், செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன்,ஆயிரம் கண்ணுடையாள், ஆயி, மகமாயி முதலிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறாள். காலப்போக்கில் ஆகம முறைப்படியான வழிபாட்டுக்குரியவளாக அம்மன் ஆராதிக்கப் படுகிறாள்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் தென்னிந்தியாவி லிருந்து புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள், மன்னார் தொடக்கம் மாத்தளை ஊடாக கால் நடையாக மலையகப் பிரதேசங்களுக்கு வருகை தந்தார்கள். பல சிரமங் களுக்கு மத்தியில் தப்பிப் பிழைத்தவர்கள் மாத்திரம் இலங்கையில் பெருந்தோட்டப் பொறிமுறைக்கு இரையாகி பிரித்தானியர்களுக்கும் சுதந்திர இலங்கைக்கும் செல்வத்தைப் பெற்றுக்கொடுத் தார்கள். அடர்ந்த காடுகளுக்கு நடுவே கால் நடையாக வருகைதந்த மக்கள் அந்தியாகும் பொழுதுகளில் உறங்கி களைப்பைப் போக்கி வந்துள்ளார்கள். இவர்களது வரவோடு நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைந்தே காணப்பட்டன. தெய்வ நம்பிக்கையும் அவற்றோடு தொடர்புபட்ட சம்பிரதாயங்களும் மிக முக்கியத்துவத்துக்குரியவைகளாகும்.

இவ்வாறான தெய்வ நம்பிக்கையின் பிரவாகத்தில் அமைந்த ஆலயமாகவே மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகிறது. மாத்தளையில் தமிழர்களின் செறிவைக் குறைப்பதற்கான பல நிகழ்ச்சி நிரல்கள் இடம்பெற்றபோதிலும் இவ்வாலயத்தின் கீர்த்தியில் எதுவித குறைவுமின்றி நாளுக்கு நாள் சிறப்புப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பான்மையாக வாழ்கின்ற சிங்கள மக்களின் நம்பிக்கையையும் வென்ற தளமாகத் திகழ்கிறது. மாத்தளை முத்துமாரியம்மனின் அருட்கடாட்சத்தை அறிந்து நம்பிக்கையோடு நேர்த்திக்கடன் வைத்து வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக் கத்தக்கது. சுற்றுலாப் பிரயாணிகளைக் கவர்ந்த



இடமாகவும் பிரசித்தி பெற்றுள்ளது.

அம்மன் வழிபாடு தொடர்பில் பல தொன்மக் கதைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் மாத்தளை வடிவேலன் குறிப்பிட்டுள்ள ரேணுகாதேவி பற்றிய தொன்மக் கதை பிரதானமா கக் கொள்ளப்படுகிறது.

அபிதான சிந்தாமணியில் ஜமதாக்கினி மாமுனிவரின் துணையாக ரேணுகாதேவி சித்திரிக்கப்படுகிறாள். ரேணுகையின் கணவன் இறந்தபோது ரேணுகை உடன்கட்டை ஏறுகிறாள். ரேணுகை உடன்கட்டை ஏறிய நிலையில், இந்திரன் வருணனை ஏவி பெருமழை பெய்வித்துள்ளான். உடலிலுள்ள ஆடைகள் எரிந்துபோயின. உடலெங்கும் தீக்கொப்பளங்கள் தோன்றின. ரேணுகை தனது உடலில் உடைகளற்ற நிலையில், அங்கிருந்த வேப்பிலைகளைப் பறித்து உடையாக அணிந்துகொள்கிறாள். பின்னர் அருகிலுள்ள புலையச்சேரி எனப்படும் ஒடுக்கப்பட்டவர்கள் வசிக்கும் இடத்துக்குச் சென்று உணவு தருமாறு வேண்டுகிறாள். இச்சேரியில் வாழும் மக்கள் தமது உணவை வழங்காது பச்சரிசி, வெல்லம், மா, இளநீர் முதலியவற்றை வழங்கியுள்ளார்கள். அவற்றை உண்ட நிலையில் வண்ணார் வீதி சென்று உடையைப் பெற்று அணிந்து கணவனை எரித்த இடத்துக்கு காலைவேளையிலேயே வந்துள்ளாள்.

ரேணுகையின் முன்னால் தோன்றிய சிவனின் அசரீரி, ''நீ நம் சிவசக்தி அம்சமாக வந்தவள். நீ பூவுலகில் கிராம தேவதையாகக் கோயில் கொண்டு வாழ்ந்திடு. கிராமப்புற மக்களுக்கு வரும் துன்பங்களையும் துயரங்களையும் நீக்கி அவர்களுக்கு அருள் செய்து நீ மாரி எனப் பெயர்கொண்டு சக்தி அம்சமாக வாழ்ந்திடு. உன் உடம்பில் ஏற்பட்ட தீப்புண் கொப்பளங்களே அம்மை நோய். நீ தரித்த வேப்பிலையே அந்நோய்க்கு மருந்தாகும். இச்சந்தர்ப்பத்தில் பச்சரிசி, மா, வெல்லம், இளநீர், கூழ் ஆகியவையே உனக்குரிய நைவேத்தியமாகும். உனை போற்றி வழிபடுபவர் துயர் நீக்குக'' - என்ற சிவனது வரத்துக்கமைய ரேணுகை மாரி எனும் நிலை பெறுகிறாள்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அமையப்பெற்றுள்ள இவ்விடம் வனாந்தரமாக இருந்த நிலையில், பிரயாணிகள் ஓய்வெடுத்து செல்லும் களமாகவே விளங்கியுள்ளது. வர்த்தக நோக்கத்துக்காகவும் பிரயாண தேவைக்காகவும் வருகை தந்தவர்கள் ஓய்வுபெறுவதற்கான இடமாகவும் அமையப்பெற்றுள்ளது. தலைமன் னாரிலிருந்து கால் நடையாக வருகைதந்தவர்க ளுக்கு சற்று ஆறுதலை அழித்த இடமாகவும் இத்தளம் விளங்குகிறது. இவ்வாறு புலம்பெயர்ந்த மக்களின் நலனில் அக்கறைகொண்ட சக்தியாக அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மாள் விளங்குகிறாள் என்ற நம்பிக்கை அவதானத்துக்குரியதாகும். அடியார் ஒருவரின் கனவில் தோன்றிய முத்துமாரியம்மன் இக்களத்திலுள்ள வில்வ மரத்தடியின் கீழ் இருந்து அருள்பாலிப்பதாக கூறியுள்ளமைக்கமைய அம் மரத்தின் கீழ் அம்மனை அடையாளப்படுத்தி வணங்கியதாகக் கூறப்படுகிறது. இவ்விடயம் குறித்த ஆதாரங்கள் பல உள்ள நிலையில், அதன் தொடர்ச்சி நிலையில் இவ்வாலயத்தின் வளர்ச்சி நிலை குறிப்பிடத்தக்கதாம்.


பல வருடங்கள் வழிபட்டு அம்மனின் அருட் கடாட்சத்தைப் பெற்ற நிலையில் இவ்வாலயத்தைச் சூழ்ந்த சமூகத்தவர்களின் ஈடுபாட்டில் 1960ஆம் ஆண்டு முதலாவது மஹா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தியுள்ளார்கள். இவ்வாலயத்தின் வளர்ச்சி யில் 1974, 1989, 2002, 2013 ஆகிய வருடங்க ளில் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேகங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். அவ்வாறே 1963இல் ஆலய வளாகத்தினுள் சண்டேஸ்வரி ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. 1971இல் முத்துமீனாட்சி சமேத சோமசுந்தரேஸ்வரருக்கு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. 1972இல் மஹா விஷ்ணு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. 1973இல் மேற்கு இராஜகோபுரம் நிர்மாணிக் கப்பட்டதுடன், இவ்வருடத்திலேயே மேற்கு இராஜகோபுரமும் மேற்கு வாசல் மணிக்கோபுர மும் அமைக்கப் பட்டன. 1992 இல் வசந்த மண் டபம் புனருத் தாபனமும் தீர்த்தக் கேணியும் நிர்மாணிக்கப்பட்டன. 1998இல் நவதள இராஜகோபுர பணி தொடங்கப்பெற்று 2005ஆம் ஆண்டு அத்திருப்பணி நிறைவுபெற்றது. 2009ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற கிழக்கு வாசல் கோபுர நிர்மாணம் 2011ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. இக்காலங்களில் இடம்பெற்ற கும்பாபிஷேகங்களும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.


1965 இல் பஞ்சரத பவனி ஆரம்பிக்கப் பட்டதோடு 1968இல் கொடித்தம்பமும் நிர்மாணிக்கப்பட்டது. 1977இல் முதலாவது சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டதுடன், 1993இல் இரண்டாவது சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டது.

இலங்கையில் அறநெறிப் பாடசாலை என்ற அமைப்பு உருவாவதற்கு அடித்தளமிட்ட ஆலயமாக இவ்வாலயம் சிறப்பு பெறுகிறது. கணினி வகுப்புகள், பாலர் பாடசாலை, தையல் வகுப்புகள் என்றவாறு கல்வித் துறைக்கும் சேவையாற்றுவதுடன், பொறுப்பு வாய்ந்த சமூக நிறுவனமாக சமூக பணிகளையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் அறங்காவலர் சபை உறுப்பினர்களின் சீரிய பணி மிகுந்த அவதானத்துக்குரியது. திருவாளர்களான க.குமாரசாமி, த.மாரிமுத்து செட்டியார், மா.ராஜரட்ணம், க.சரவணமுத்து, ச.சந்திரசேகரம், மா.சாபாரட்ணம், தி.விக்னேஸ்வரன் ஆகியோரின் தலைமையிலான அறங்காவலர் சபையின் பணிகளும் சிறப்புக்குரியவையாகும். அதன் தொடர்ச்சி நிலையில் தற்போதைய தலைவர் விக்னேஸ்வரா சர்வானந்தா தலைமையிலான அறங்காவல் சபை உறுப்பினர்களின் செயற்பாடுகளும் சிறப்புப் பெறுகின்றன.









இவ்வுலகத்திலே நோய் நொடிகளைத் தீர்த்து அருள்பவள் அன்னை முத்துமாரி. இப்பிரதேச மக்களின் உதிரத்தோடு கலந்துள்ளது அவள் நாமம். இவ்வாறான பெருமைமிக்க ஆலயத்தின் வருடாந்த மாசிமக மகோற்சவ பெருவிழாவில் மக்களின் குறை தீர்க்க ஸ்ரீ விநாயகப்பெருமான், ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், ஸ்ரீ சிவன் அம்பாள், அன்னை ஸ்ரீ முத்துமாரி, ஸ்ரீ சண்டேஸ்வரி ஆகிய சக்திமிகு தெய்வங்கள் பஞ்சரதங்களில் எழுந்தருளி ஆரோகணித்து பக்தர்களின் அரோகரா சத்தத்துடன் வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாக அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. அத்தோடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாத்த அம்பிகையின் திருவருள் கிடைத்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்காக பாலஸ்தானம் எதிர்வரும் 09.04.2025ஆம் திகதி நடைபெறுமென்பதை தங்களுக்கு அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சிடைகின்றோம் என்ற அறங்காவலர் சபைத் தலைவரின் செய்தியும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரசுரம் வெளிவருவதற்கு ஒத்தாசை புரிந்த அறங்காவலர் சபையினருக்கும் எஸ்.பொன்னையா ஆச்சாரி, ஜனலங்கா என்.கோகுலராஜன், சிதம்பரப்பிள்ளை நகுலேஸ்வரன் ஜே.பி, மயூரா ச.முருகானந்தன், ஏ.ஓ.லக்ஷ்மி, சிவசக்தி, நவோதயம். கே.பி.சத்தியசீலன், வி.சர்வானந்தா ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியைப் பகிர்வோம்.

மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு மாத்தளை மண் நிறையவே பங்களிப்பைச் செய்து வந்துள்ளது. மாத்தளை அம்மனின் புகழையும் சிறப்பையும் எடுத்துச்சொல்வதில் பல கலை, இலக்கிய ஆளுமைகள் செயற்பட்டுள்ளார்கள். முருகேசுப்பிள்ளை, எஸ்.சிவனாண்டி, மாத்தளை கார்திகேசு, மாத்தளை செல்வா, மலரன்பன், என்.ரகுநாதன், மாத்தளை வடிவேலன், ஏ.இராஜேந்திரன், ஆர்.கிருஸ்ணகுமார், மாத்தளை சோமு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். இவ்வாலயத்தின் வரலாற்றை ஆவணப்படுத்துவதில் மாத்தளை ராஜ்சிவாவின் பங்களிப்பும் சிறப்பிடம் பெறுகிறதெனலாம்.

***மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்போம்!!***

### தேவஸ்தான அறங்காவல் சபையினர் 2024 -2025



**முன்வரிசை:-இடமிருந்து வலம்**

**திரு.அங்கப்பன் திருச்செல்லவம், திரு.செல்லத்துரை விஸ்வநாதன், திரு.வேலாயுதம் சுதர்ஷன் (உப தலைவர்), திரு.விக்னேஸ்வரா சர்வானந்தா (தலைவர்), திரு.துரைசாமி சந்திரசேகரம்பிள்ளை (செயலாளர்), திரு.பெரியசாமி மனோகரன் (பொருளாளர்), திரு.இராமசாமி கிருஷ்ணகுமார் (உப செயலாளர்)**

**பின்வரிசை:- இடமிருந்து வலம்**

**திரு.அங்கமுத்து யோகராஜா செட்டியார், திரு.வீரையா முத்துசாமி, திரு.தியாகராஜா சத்தியசீலன், திரு.சுப்பையா பிரதீபன், திரு.தியாகராஜா கிஷோகுமார், திரு.மாரிமுத்து நாகேந்திரன் ராஜதுரை, திரு.பரமநாதன் ஜெயநாத்.**

**எஸ்.பொன்னையா ஆச்சாரி, ஜனலங்கா என்.கோகுலராஜன், சிதம்பரப்பிள்ளை நகுலேஸ்வரன் ஜே.பி, மயூரா ச.முருகானந்தன், ஏ.ஓ.லக்ஷ்மி, சிவசக்தி, வி.சர்வானந்தா ஆகியோருடன் நவோதயம் கே.பி.சத்தியசீலன்.**

# கரகொட உயங்கொட மைத்ரிமூர்த்தி தேருக்கு சன்னஸ் பத்திரம் வழங்கும் அரச விழா



இலங்கை அமரபுர மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் பதவிபெற்ற பலாங்கொடை ஸ்ரீ தர்மானந்த வித்யாயதன பிரிவேனாவின் பீடாதிபதியும் ராஸ்ஸகல விகாரையின் விஹாராதிபதியுமான வண. கரகொட உயங்கொட மைத்ரிமூர்த்தி தேரருக்கு சன்னஸ் பத்திரம் வழங்கும் அரச விழா நேற்று முன்தினம் (10) பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

புதிய மகாநாயக்க தேரருக்கு ஜனாதிபதியால் குறித்த சன்னஸ் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, மகாநாயக்க தேரருக்கு விஜினிபத்திரத்தை வழங்கினார்.

1948ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி மாத்தறை, கம்புருபிட்டியவில் பிறந்து, 1962 ஆம் ஆண்டு பலாங்கொடை வண. ஆனந்த மைத்ரி தேரரால் புத்த பிக்குவாக துறவு வாழ்வில் நுழைந்த வண. கரகொட உயங்கொட மைத்ரிமூர்த்தி தேரருக்கு அறுபது ஆண்டுகளுக்கும் மேலான துறவற வாழ்வில் அவரது மத, சமூக மற்றும் கல்விச் சேவைகளைப் பாராட்டும் விதமாக அமரபுர மகா நிக்காயவால் மகாநாயக்க பதவி வழங்கப்பட்டது.

இப்புனித நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, ''வீழ்ச்சியடைந்த சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் ஒழுக்கமான நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் மகா சங்கத்தினரின் தலைமையிலான மத ஸ்தலங்களுக்கு மிகப்பெரிய மற்றும் அசைக்க முடியாத பொறுப்புள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் சாதனைகள் எவ்வளவு எட்டப்பட்டாலும் நல்ல சமூகம் உருவாக்கப்படாவிட்டால் அவை எதுவும் பயனளிக்காது.

நாட்டின் வீழ்ச்சியடைந்துள்ள சமூகக் கட்டமைப்பை சட்டத்தின் மூலம் மட்டும் சீர்ப்படுத்த முடியாது. நாட்டில் கருணையுள்ள சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டும். புத்தபெருமான் உட்பட அனைத்து மத குருமார்களும் உபதேசித்த மீட்சியின் சாராம்சம் குறித்த வலுவான கருத்தாடல் நாட்டுக்கு உடனடியாகத் தேவை.

பௌத்த கருத்தாடல் சட்டம் தொடர்பாக மகாநாயக்க தேரர்களுடன் தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. விகாரை தேவாலகம் சட்டத்தின் பிரிவு 41 மற்றும் 42க்கான திருத்தங்கள் வரைபு செய்யப்பட்டுள்ளன. அவை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் சங்க நிறுவனத்தை முறைப்படுத்துவதற்குத் தேவையான அதிகாரத்தை மகாநாயக்க தேரர் தலைமையிலான சங்க சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்''- என்றார்.

மகாநாயக்க தேரரின் வாழ்க்கை வரலாறு குறித்த நினைவுப் புத்தகமும் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மூன்று நிக்காயக்களின் மகா சங்கத்தினர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள், விகாரைகளின் நிறைவேற்றுச் சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# யஹலதென்னவில் வன விலங்குகளை வேட்டையாடிய முன்னாள் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட ஐவர் கைது

## பொலிஸ் அதிகாரியின் வீட்டிலிருந்து ஆயுதங்களும் மீட்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யஹலதென்ன பகுதியில் காட்டு விலங்குகளை வேட்டையாடிய குழுவொன்றை பிரதேசவாசிகள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் அவர்களிடமிருந்து சந்தேகத்துக்கிடமான பல பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைதாகியுள்ள மாவத்தகம முன்னாள் பொலிஸ் பரிசோதகரின் வீடொன்றிலிருந்தே 5 துப்பாக்கிகள் மற்றும் சந்தேகத்துக்கிடமான பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பொலிஸ் பரிசோதகர் சிறிது காலத்துக்கு முன் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், அவரது வீட்டிலிருந்து போர 12 ரக துப்பாக்கிகள் இரண்டு, போர 16 ரக துப்பாக்கிகள் இரண்டு, ஒரு அரை தானியங்கி ரிவோல்வர் (A semi-automatic revolver) ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தவிர கறுப்பு வாயு ரைபிள் ஒன்று, 12 போர ரக துப்பாக்கியின் பாகங்கள், 12 மற்றும் 16 போர துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 37 கேட்ரிட்ஜ்கள் மற்றும் ரி- 56 மற்றும் ரி- 84 ரகத் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் இரண்டு தோட்டாக்கள், இராணுவ விசேட அதிரடிப்படையினர் பயன்படுத்தும் தலைக்கவசங்கள், 06 கத்திகள், இராணுவ சீருடைக்கு நிகரான மூன்று காற்சட்டைகள், மூன்று கவசங்கள் உள்ளிட்ட இன்னும் பல பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் மேலும் ஐவருடன் யஹலதன்ன பகுதியில் கெப் வாகனத்தில் வனவிலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்தபோது கடந்த 08ஆம் திகதி இரவு பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு இரவு நடமாடும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பேராதனை பொலிஸ் உத்தியோகத்தர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அப்போது மேற்படி கெப் வாகனத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட காட்டுப்பன்றியின் உடல் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பன்றியைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட 12 போர ரகத் துப்பாக்கியை சந்தேகநபர்கள் காட்டுப் பகுதியில் வீசியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குறித்த தகவல் வெளியானதையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக மாவத்தகம பொலிஸாருக்கு சந்தேக நபர்கள் தொடர்பில் பேராதனை பொலிஸார் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாவத்தகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குருநாகல் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளார். அதனையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலின் பேரில் மாவத்தகம பொலிஸார் குருநாகல் விசேட அதிரடிப்படை அதிகாரிகளின் உதவியுடன் கொட்டிகாபொல பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னாள் பொலிஸ் பரிசோதகருக்குச் சொந்தமான வீடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள வளாகம் பூரண சோதனைக்குட்படுத்தப்பட்டன. அதன்போதே துப்பாக்கிகள், வெடிமருந்துகள் உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் கண்டுபிடித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நான்கு சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்திய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**(ஜோசப் நயன்)**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் (10) மதியம் மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.


ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளரும் ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான டானியல் வசந்தன் தலைமையில் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தையே செலுத்தியுள்ளனர்.

இந்நிலையிலே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.



# இலங்கைக்கான சீன அரசியல் உயர்ஸ்தானிகரை சந்தித்த சிறிரெலோ



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் ப.உதயராசா நேற்று முன்தினம் (10) கொழும்பிலுள்ள சீன உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் இலங்கைக்கான சீன நாட்டின் அரசியல் உயர்ஸ்தானிகர் சின் லிஹோங்கை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது வன்னி பிரதேசத்தில் சீன நாட்டின் நிறுவனத்தினூடாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் மக்களின் பொருளாதாரத்துக்கும் கைத்தொழில்களை ஊக்குவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பானது எதிர்காலத்தில் வன்னி மக்களின் நலனுக்கு ஏதுவாக இருக்குமென சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

# தீயணைப்புச் சேவைக்காக தேசிய திட்டமொன்றைத் தயாரிக்க அரசு கவனம்




சேவை வழங்கலின்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு சேவையை முறையாக மேற்கொள்வதற்காக தீயணைப்புச் சேவைக்காக தேசிய திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் கவனஞ் செலுத்தியுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரபா ருவன் செனரத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (10) நாடு முழுவதுமுள்ள அனைத்து தீயணைப்புப் பிரிவுகளினதும் தலைமை அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தலதா மாளிகை பெரஹெரவுக்காக தீயணைப்புப் பிரிவினால் செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

தற்போதுள்ள பிரச்சினைகளைக் குறைத்து பிற பண்டிகைக் காலங்களில் வழங்கப்படும் சேவைக்கும் மேலாக தரமான சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொறுப்புக் காணப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது காணப்படும் மனித வளங்கள் மற்றும் தொழில்நுட்பப் பற்றாக்குறை காரணமாக திறமையான சேவையை வழங்குவது ஒரு பெரிய சவாலாக உள்ளதென்று கண்டி தீயணைப்பு சேவைப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மனிதவளப் பற்றாக்குறை, தொழில்நுட்ப மற்றும் நீர் விநியோகம் என்பவற்றின் போது ஏற்படும் சிக்கல்கள் காரணமாக மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் தங்கள் சேவையை முன்னெடுத்து வருவதாக மாவட்ட தீயணைப்புத்துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

# விடுமுறை நாட்களில் தொடரும் பஸ் சேவை நிறுத்தம்

தனியார் பஸ் சேவைகள் வார விடுமுறை நாட்களில் தொடர்ச்சியாக சேவையினின்றும் நிறுத்தப்படும் சம்பவம் இறக்குவானை நகரில் இடம்பெற்று வருகின்றது.

இறக்குவானை நாவின்ன கிராம பஸ் சேவைகளே இவ்வாறு தொடர்ச்சியாக சனிக்கிழமைகளில் சேவை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றன.

மேலும் இறக்குவானை நகர் நாவின்ன கிராமத்துக்குட்பட்ட பகுதிகளில் சுமார் எட்டு கிராமங்கள் உள்ளன. இத்தனியார் பஸ் சேவை நிறுத்தத்தால் கிராம மக்கள் பாதிக்கப்படுவதுடன், இதில் பாலம்கோட்டை, வெத்திலகந்தை,பெலாக்கொல, நாவின்ன ஆகிய நான்கு கிராம மக்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தனியார் பஸ்சேவை நிறுத்தத்தால் சனிக்கிழமைகளில் மேலதிக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் இந்த எட்டு கிராமங்களுக்கும் ஒரு இ.போ.ச.பஸ் வண்டியே சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்கொனையில் மார்க்கச் சொற்பொழிவு

மக்கொனை அஹதிய்யா பாடசாலை ஏற்பாடு செய்துள்ள அஹதிய்யாவின் 25 வருட பூர்த்தி விழாவும் விசேட மார்க்கச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. இப்தார் நிகழ்வும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

மக்கொனை Water's Meet Reception மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் ஆலோசகரும் ஹாஷிம் உமர் பௌண்டேஷன் ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொள்ளவுள்ளார்.



கனடாவில் வாழும் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான டி.பி.எஸ்.ஜெயராஜ் எழுதிய 'அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம்; இலங்கையின் முதலாவது இடதுசாரி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க' என்ற நூலின் வெளியீட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்றது. இதன்போது பத்திரிகையாளர்களான வீரகத்தி தனபாலசிங்கம், அனந்த் பாலகிட்ணர், சமூக, அரசியல் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருலிங்கம், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். மூத்த பத்திரிகையாளர் வடமராட்சி சின்னத்துரை தில்லைநாதன் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



# பிரித்தானிய கடற்பகுதியில் தீப்பிடித்தெரிந்த இரு கப்பல்கள்

## 35 பேர் மீட்பு; ஒருவர் மாயம்



பிரித்தானியாவின் தெற்கு கடற்பகுதியில் எரிபொருள் ஏற்றிச்சென்ற கப்பலொன்றுடன் வேதிப்பொருள் ஏற்றிச்சென்ற சரக்கு கப்பல் மோதி தீப்பிடித்து எரிந்துள்ளது. இந்த விபத்தில் இரு கப்பல்களிலிருந்தும் 35 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில் ஒருவர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரீஸிலிருந்து போர் விமானத்துக்கு பயன்படுத்தப்படும் எரிபொருளை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவுக்கு சரக்கு கப்பலொன்று சென்றுகொண்டிருந்த அதேவேளை, ஸ்கொட்லாந்திலிருந்து வேதிப்பொருட்களை ஏற்றிக்கொண்டு நெதர்லாந்துக்கு சரக்கு கப்பலொன்றும் சென்றுகொண்டிருந்தது. குறித்த இரு கப்பல்களிலும் மொத்தம் 36 மாலுமிகள் பயணித்தனர்.

பிரித்தானியாவின் தெற்கு கடற்பகுதியில் நேற்று (11) குறித்த சரக்கு கப்பல்கள் சென்றுகொண்டிருந்தபோது ஒன்றோடொன்று மோதின. இந்த சம்பவத்தில் இரு கப்பல்கள் தீப் பற்றி எரிந்தன.

தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு, மீட்புப்படையினர் கப்பல்களில் பரவிய தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தில் கப்பலில் சிக்கித்தவித்த 35 மாலுமிகளும் பத்திரமாக மீட்கப்பட்ட நிலையில் மாலுமியொருவர் காணாமல் போயுள்ளார். அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# உலகெங்கும் மூன்றுமுறை முடங்கிய ‘எக்ஸ்’ தளம்

## ‘பின்னணியில் உக்ரைன் சதி’ – என்கிறார் எலான் மஸ்க்

உலகம் முழுவதும் எக்ஸ் தளம் (ட்விட்டர்) நேற்றுமுன்தினம் (10) ஒரே நாளில் மூன்று முறை முடங்கியதால் பயனர்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். இந்நிலையில் ‘‘எக்ஸ் சமூகவலைதள முடக்கத்தின் பின்னணியில் உக்ரைனின் சதி இருக்கலாம்’’ என சந்தேகம் தெரிவித்துள்ளார் அதன் தலைவர் எலான் மஸ்க்.

சமூக வலைதளங்கள், இணையதளங்களின் முடக்கங்களை கண்காணிக்கும் Downdetector.com தரவுகளின்படி, நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் முதல்முறையாக எக்ஸ் தளம் முடங்கியது. சில மணி நேரங்களில் பிரச்சினை சரிசெய்யப்பட்ட நிலையில் மீண்டும் மாலை 07 மணிக்கு எக்ஸ் தள செயற்பாடுகள் முடங்கின. அதன்பிறகு மீண்டும் சரிசெய்யப்பட்டு, மூன்றாவது முறையாக 8.45 மணிக்கு மீண்டும் தளம் முடங்கியது. பல மணி நேரம் இந்த முடக்கம் நீடித்தது.

இது குறித்து எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க் பொக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில்,

“எக்ஸ் தளத்தின் மீது மிகப்பெரிய சைபர் தாக்குதல் நடந்துள்ளது. அந்தத் தாக்குதல் உக்ரைன் பகுதியிலிருந்து நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கணினியின் ஐ.பி. முகவரி உக்ரைனிலிருந்தே நிகழ்த்தப்பட்டுள்ளதாகக் காட்டுகிறது” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக சைபர் தாக்குதல் குறித்து எக்ஸ் தளப் பதிவில் மஸ்க், “எக்ஸ் தளத்தின் மீது அன்றாடம் தாக்குதல் நடத்தப்படுகிறது. ஆனால், இது மிகப்பெரிய தாக்குதல். இதன் பின்னணியில் மிகப்பெரிய வலை அல்லது நாட்டின் தலையீடு இருக்க வேண்டும்” என்று தெரிவித்திருந்தார். இதற்கு பின்னர் அளித்த ஊடக செவ்வியில் அது உக்ரைனாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பியுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையே கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் போர் மூண்டது. மூன்றாண்டுகளாக போர் நடைபெற்று வரும் நிலையில் உக்ரைனுக்கு இணைய சேவை வழங்கி வருகிறது எலான் மஸ்க்கின் ஸ்டார் லிங்க் நிறுவனம்.

இந்நிலையில் அண்மையில் மஸ்க் அளித்தப் பேட்டியொன்றில், “உக்ரைனுக்கு வழங்கிவரும் இணைய சேவையை நிறுத்தினால் அந்நாடு சீர்குலைந்துவிடும். உக்ரைன் இராணுவத்தின் முதுகெலும்பாக ஸ்டார் லிங்க் சேவையே இருக்கிறது” என்று கூறியிருந்தார். இருப்பினும் அவ்வாறு செய்யப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக ரஷ்யப் போரில் உக்ரைனின் நிலைப்பாட்டை எக்ஸ் தள தலைவரும் அமெரிக்க அரசின் செயற்றிறன் துறையை (DOGE) நிர்வகிப்பவருமான மஸ்க் தொடர்ச்சியாக விமர்சித்துவந்த நிலையில் இந்த சைபர் தாக்குதல் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி ரொட்ரிகோ கைது



பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி ரொட்ரிகோ டுட்டெர்டேவை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரது ஆட்சிக் காலத்தில் (2016-22) போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில், ஆயிரக்கணக்கானோரை கொன்று மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக தொடரப்பட்ட வழக்கில் அவரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டுட்டெர்டேவின் ஆட்சிக் காலத்தில் ‘மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள்’ என்ற போதைப்பொருள் எதிர்ப்பு இருந்தது. ‘போதைப்பொருட்களுக்கு எதிரான போர்’ என்றும் அழைக்கப்பட்டது. அவரது ஆறு ஆண்டுகால ஆட்சிக் காலத்தில், 7,000க்கும் மேற்பட்டோர் அதிகாரபூர்வ போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கொல்லப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(2016-22) போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில், ஆயிரக்கணக்கானோரை கொன்று மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக தொடரப்பட்ட வழக்கில் அவரை நீதிமன்றம் கைது செய்ய உத்தரவிட்டது. முன்னாள் ஜனாதிபதிக்கு பிடியாணை பிறப்பிக்குமாறு அரச வழக்கறிஞர் ஜெனரல் அறிவிப்பை வழங்கினார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ டுட்டெர்டே ஹொங்கொங்கிலிருந்து வந்தவுடன் மணிலா விமான நிலையத்தில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

# கார்ல்சனின் ஜீன்ஸ் பேண்ட் 36,100 அமெரிக்க டொலருக்கு ஏலம்



ஜீன்ஸ் அணிந்து வந்ததால் போட்டியிலிருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்ட அதே ஜீன்ஸை மேக்னஸ் கார்ல்சன் 36,100 அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் விற்றுள்ளார்.

ஐந்து முறை உலக செஸ் சம்பியனான மேக்னஸ் கார்ல்சன், ஜீன்ஸ் அணிந்து போட்டியில் பங்கேற்க வந்ததற்காக உலக ரேபிட் மற்றும் பிளிட்ஸ் சம்பியன்ஷிப் 2024இல் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். மேக்னஸ் கார்ல்சன் 2ஆம் நாள் போட்டிக்கு ஜீன்ஸ் அணிந்து வந்தார். இதையடுத்து போட்டியின் ஆடை கட்டுப்பாடு விதிமுறைகளை மீறியதற்காக கார்ல்சனுக்கு போட்டியின் நடுவர் 200 அமெரிக்க டொலர் அபராதம் விதித்தார். மேலும், கார்ல்சனை ஜீன்ஸ் உடையை மாற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அதனை கார்ல்சன் ஏற்க மறுத்தார்.

இதன் காரணமாக போட்டியின் 9ஆவது சுற்றிலிருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக பிடே தரப்பில் அறிவிக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த கார்ல்சன், பிளிட்ஸ் சம்பியன்ஷிப் 2024இல் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்து வெளியேறினார்.

இந்நிலையில், இந்த ஜீன்ஸ் பேண்டை அவர் ஏலத்தில் விட்டுள்ளார். இதில் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் அந்த ஜீன்ஸ் பேண்ட் 36,100 அமெரிக்க டொலருக்கு விலைபோயுள்ளது. இந்தத் தொகையை அவர் அறக்கட்டளை ஒன்றுக்கு வழங்கியுள்ளார். ஜீன்ஸ் பேண்ட் ஒன்று இவ்வாறு மிகப்பெரிய பெறுமதிக்கு ஏலம் போனது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.



# இந்தியாவை பின்தள்ளி முதலிடம் பிடித்த இலங்கை

இந்தியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி20 தொடரில் குமார் சங்கக்கார தலைமையிலான இலங்கை அணி லீக் சுற்று முடிவில் முதலிடம் பிடித்து அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

இங்கிலாந்து அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் குமார் சங்கக்காரவின் அபார சதம் மூலம் 09 விக்கெட்டுகளினால் அபார வெற்றியீட்டிய இலங்கை அணி இவ்வாறு புள்ளிப்பட்டியலில் இந்தியாவை பின்தள்ளி முதலிடம் பிடித்தது.

இலங்கை மாஸ்டர்ஸ் அணி தனது முதல் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான இந்திய மாஸ்டர்ஸ் அணியிடம் தோற்றபோதும் அடுத்து நடந்த தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து மாஸ்டர்ஸ் அணிகளுக்கு எதிரான போட்டிகளில் வரிசையாக வெற்றியீட்டியது.

ஆறு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் நாளை (13) மற்றும் நாளை மறுதினம் (14) ராய்ப்பூரில் நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

# இலங்கை வரும் பங்களாதேஷ் இளையோர் அணி




பங்களாதேஷ் இளையோர் (19 வயதுக்குட்பட்ட) கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை இளையோர் கிரிக்கெட் அணியுடன் 06 போட்டிகள் கொண்ட இளையோர் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது.

ஏப்ரல் மாத இறுதியில் பங்களாதேஷ் இளையோர் அணி இவ்வாறு இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நிலையில் குறித்த தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் 26ஆம் திகதி ஒருநாள் தொடர் ஆரம்பமாகும் நிலையில் ஒருநாள் தொடருக்கு முன்னதாக பயிற்சிப் போட்டியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒருநாள் தொடரின் போட்டிகள் அனைத்தும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் 24ஆம் திகதி பயிற்சிப் போட்டி நடைபெறும் நிலையில், தொடர்ந்து 26, 28, மே 01, 03, 06, 08ஆம் திகதிகள் முறையே அடுத்தடுத்த போட்டிகள் நடைபெறவுள்ளன.

# விளையாட்டுத் துளிகள்

***ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மகளிரை கௌரவிக்கும் விதமாக மே 1ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடைபெறும் மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் பிங்க் நிற ஜெர்சி அணிந்து விளையாடவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான ஜெர்சி அறிமுக நிகழ்வு சர்வதேச மகளிர் தினமன்று நடைபெற்றது. இதனை ராஜஸ்தான் அணியின் இயக்குனர் சங்கக்கார அறிமுகம் செய்தார். ஒவ்வொரு சீசனிலும் ராஜஸ்தான் அணி இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.***

********************

***கடந்த ஆண்டு ஜூன் மாதம் பீபா உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் குவைத் அணியுடனான போட்டிக்கு பிறகு சர்வதேச உதைபந்துக்கு விடைகொடுத்த இந்திய உதைபந்து வீரர் சுனில் சேத்ரி (40 வயது) மீண்டும் இந்திய அணியில் விளையாடவுள்ளதாக அறிவித்துள்ளார். இந்திய அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் (151 போட்டிகள்) மற்றும் அதிக கோல்கள் (94 கோல்கள்) பதிவு செய்த வீரராக சுனில் சேத்ரி திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.***

********************

***சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியை வைத்து ரூ.5 ஆயிரம் கோடிக்கு மாபெரும் சூதாட்டம் நடந்ததாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே இந்தியா - அவுஸ்திரேலியா இடையேயான அரையிறுதிப் போட்டியின்போது டெல்லியில் 05 பேர் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. கைதானவர்கள் அளித்த தகவலின் அடிப்படையிலேயே, தற்போது விசாரணை டுபாய் வரை நீண்டுள்ளது.***

# சம்பியன்ஸ் கிண்ணத்தின் சிறந்த அணியை அறிவித்த ஐ.சி.சி.

2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான சிறந்த அணியை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. நியூஸிலாந்தின் சாண்ட்னர் தலைமையிலான அந்த அணியில் 06 இந்திய வீரர்கள் (12ஆவது வீரராக அக்சர் படேல்), 04 நியூஸிலாந்து மற்றும் 02 ஆப்கானிஸ்தான் வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய 05 அணிகளிலிருந்து ஒரு வீரர் கூட இந்த அணியில் இடம்பெறவில்லை.

**ஐ.சி.சி.- தெரிவு செய்த அணி விபரம்**

***ரச்சின் ரவீந்திரா, இப்ராஹிம் சத்ரன், விராட் கோஹ்லி, ஷ்ரேயாஸ் ஐயர், கே.எல்.ராகுல், கிளென் பிலிப்ஸ், அஸ்மத்துலா ஒமர்சாய், மிட்செல் சாண்ட்னர் (தலைவர்), முஹமட் சமி, மேட் ஹென்றி, வருண் சக்ரவர்த்தி***

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7